Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 19 (23.01.2003) வியாழக்கிழமை இதழ் : 114

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)



அளவெட்டியில் ஆளில்லாத உளவு விமானம் வீழ்ந்த இடத்தில் இராணுவத்தினர் கூடி நிற்பதை முதலாவது படத்திலும், சம்பவ இடத்திற்கு விமானப்படை அதிகாரிகள் வந்திறங்கிய உலங்கு வானூர்தியை இரண்டாவது படத்திலும், விமானம் வீழ்ந்த இடத்தில் வெங்காயப் பயிர்கள் அழிந்து காணப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படங்கள் – ரஜீவ்)

# ஆளில்லாத உளவு விமானம் அளவெட்டியில் வீழ்ந்தது!

## குடாநாட்டை நேற்று பரபரப்பாக்கிய சம்பவம்

(அளவெட்டியிலிருந்து நமது நிருபர் ஜெ.ரஜீவ்)

**விமானப்படைக்குச்சொந்தமான மிக நவீனமான ஆளில்லா உளவு விமானமொன்று நேற்றுக்காலை அளவெட்டிப்பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. பலாலி விமானத் தளத்திலிருந்து அது தானியங்கியாக இயக்கப்பட்டுக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடந்தது.**

அளவெட்டி - அதிரம்புலம் எனும இடத்திலுள்ள வெங்காயத் தோட்டத்தில் விமானப்படை ஆளில்லா உளவு விமானம் வீழ்ந்து நொருங்கியது. இச்சம்பவம் நேற்றுக்காலை 11.28 மணியளவில் இடம்பெற்றது.

திடீரென இரைச்சலுடன் விமானம் வீழ்ந்ததாக அப்பகுதியில் தோட்ட வேலைகளில் ஈடுபட்ட பொது மக்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து அவ்விடத்துக்கு அளவெட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும், இளவாலையிலிருந்து பொலிசாரும் விரைந்து வந்தனர். இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து, வீழ்ந்து நொருங்கிய விமானத்தின் சிதைவுகள் காணப்பட்ட பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



விண்ணாணம் விநாசியர்

சமாதான காலத்திலயும் ஏன் பறப்பானெண்டு நினைச்சுதான் 'வண்டு' விழுந்துதோ...?

# சுவிற்சர்லாந்து தூதுவர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னரே அரசியல் பேச்சுக்கள் நடக்கும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், இலங்கைக்கான சுவிற்சர்லாந்து நாட்டுத் தூதுவர் பெர்மின்றோவிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, சுவிஸ் நாட்டுத் தூதுக்குழுவினர் கிளிநொச்சியில் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 'ராகிங்' பற்றிய பத்திரிகைச் செய்தியில் எந்தவித உண்மைத் தன்மையுமில்லை

## துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடைய ராகிங் தொடர்பாக உள்ளூர் பத்திரிகையில் வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையென,

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்று நண்பகல் யாழ்.பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று அவசர கூட்டம் ஒன்று துணை (10 ஆம் பக்கம் பார்க்க)

# தாய்லாந்தில் நடக்கவிருந்த பேச்சுக்கள் ஐரோப்பாவில்!

## அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலை கருதி மாற்றம்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற இருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஐரோப்பாவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டே, இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படுவதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கஸ்ரன் கிளஸ்வீக் கூறியதாக ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை இடம்பெறும் நாடு இதுவரை தெரிவு செய்யப்படவில்லை என்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவம், புலிகளைப் பகைக்காமல் உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு

## அரசு ஆராய்ந்துவருவதாக ரணில் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

இராணுவத்தையோ புலிகளையோ விரோதித்துக் கொள்ளாமல் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் சிந்தித்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போதே, பிரதமர் ரணில் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் யுத்த நிறுத்த மீறல்கள் மற்றும் சிறுவர்களை ஆட்சேர்ப்புச்செய்வது குறித்து ஆராய மூன்று (10 ஆம் பக்கம் பார்க்க)

# எம்.பிக்களின் சிறப்புரிமைகளை மீறிய மேஜர் ஜெனரல் பொன்சேகா

## மகேஸ்வரன் ரணிலுக்கு கண்டனக் கடிதம்

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட எதிரணி அரசியல்வாதிகளுக்கு உயர் பாதுகாப்பு வலயப் பாதிப்புக்கள் குறித்து நேரில் காண்பிக்க எடுத்த முயற்சியை, குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தடுத்தமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் என்று அமைச்சர் மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள ஐந்து பக்கக் கடிதத் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# ஈராக் மீதான தாக்குதலை எதிர்ப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் இணக்கம்


ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் அதிபர்கள்.

ஈராக் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கக்கூடாது என ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளுக்குள் கருத்தொருமைப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் ராணுவ நடவடிக்கைக்கு, பிரான்ஸ் எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தவிர்த்து வந்தது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் இன்னொரு அங்கத்துவ நாடான ஜேர்மனி, பிரான்ஸின் நிலைப்பாடு குறித்து அதிருப்தி கொண்டிருந்தது.

மேலும், ஈராக் மீதான தாக்குதல் நடவடிக்கைத் திட்டம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபைக்குக் கொண்டு வரப்படுமாயின் பிரான்ஸ், 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் எனவும் ஜேர்மனி கோரியிருந்தது.

இதேவேளை, இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், ஜேர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலான நட்புறவின் நாற்பதாண்டு நிறைவு விழாவினை இரு நாட்டுத் தலைவர்களும் கொண்டாடியுள்ளனர். இந்த விழா பாரிஸ் நகரில் நேற்று ஆரம்பமாகியது.

இவ்விழாவில் கலந்துகொண்ட இரு நாட்டுத்தலைவர்களும், ஈராக் மீதான தாக்குதல் தொடர்பாக ஒருமித்த கருத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகவலம்


26-01-2003 ஞாயிற்றுக்கிழமை

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்



ஆர்கொலோ சதுரர்

- நடன நாடகம்

இலட்சியம் நோக்கிய பயணம்!!
கலக்கி மண்ணுலகை அலைக்கும் என்றாலும்
குலுக்கி விண்வெளியைக் குலைக்கும் என்றாலும்
இலட்சியம் நோக்கிய பயணம் !!

ஊடக அனுசரணை நமது ஈழநாடு

நுழைவுச் சீட்டிற்கு பூபாலசிங்கம் புத்தகசாலை



சொலக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்

லக்ஷறி பல்கட்டும் இடம்

* நவீன கண்ணாடி பிறேம்களில் கண்பரிசோதித்து மூக்குக்கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
* சங்குப் பற்களை சீனமுறையில் கட்டிக்கொள்ளவும்,
* மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து குறுகிய காலத்தில் சீரமைத்துக்கொள்ளவும் இணைந்த சேவையை வழங்குகிறார்கள்.

232/A, கண்டி வீதி,
சாவகச்சேரி.



வாசகர்களே, வாடிக்கையாளர்களே!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

நமது ஈழநாடு விளம்பர முகவர்

உடுப்பிட்டியில்

கா.பஞ்சரத்தினம்
இமையாணன்,
உடுப்பிட்டி.

தொலைபேசி இல.
226-3194, 226-3177,
070-212688




# மெக்ஸிகோவில் பூமியதிர்ச்சி; 21 சடலங்கள் இதுவரை மீட்பு!

(கொலிமா)

மெக்ஸிகோ நாட்டைப் பலத்த பூமியதிர்ச்சி தாக்கியுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்பூமியதிர்ச்சியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணிகளின்போது, 21 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.



மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதால் உயிரிழப்புகள் மேலும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மெக்ஸிகோவின் மாநிலமான கொலிமாவிலேயே பூமியதிர்ச்சி பாரிய சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இப்பூமியதிர்ச்சி றிச்டர் அளவில் 7.6 எனப்பதிவாகி உள்ள அதே வேளை, 20 அதிர்வுகள்வரை நடந்ததாக கொலிமா மாநில ஆளுநர் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த 7 வருடங்களின் பின்னர் மெக்ஸிகோவை பூமியதிர்ச்சி தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து நாட்களாக மூடப்பட்டுள்ள வெனிசுவெலா நாணயச் சந்தை

(வெனிசுவெலா)

வெனிசுவெலா, தனது நாணயச் சந்தையினை கடந்த ஐந்து நாட்களாக மூடியுள்ளது.

வெனிசுவெலாவின் நாணயமான பொலிவர், கடந்த மாதங்களில் என்றுமில்லாத அளவு பெறுமதியிறககம் கண்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யுமுகமாகவே மேற்படி நடவடிக்கையினை வெனிசுவெலா அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

வெனிசுவெலாவின ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் பதவி விலக வேண்டும் எனக்கோரி, கடந்த 7 வாரங்களாக எதிர்க்கட்சியினராலும் தொழிற் சங்கங்களாலும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றமையாலேயே அந்த நாட்டின் பொருளாதாரம் பெரும வீழ்ச்சி கண்டுள்ளது.

# அமெரிக்க உளவு விமானம்; ஈ.ராக் சுட்டு வீழ்த்தியது

(பாக்தாத்)

அமெரிக்காவின் ஆளில்லாத வேவு விமானம் ஒன்றினைத் தாம் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாக்தாத்திலுள்ள இராணுவப் பேச்சாளர் தகவல் வெளியிடுகையில், ஈராக்கின் வான் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாலேயே இந்த ஆளில்லா வேவு விமானத்தை தாம் சுட்டுவீழ்த்தியதாகத் தெரிவித்துள்ளார்.

வேவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது தொடர்பான தகவலை அமெரிக்கா இதுவரைஉறுதிப்படுத்தவில்லை.

கடந்த ஒரு மாதகாலத்தில் ஈராக்கினால் சுடப்பட்ட இரண்டாவது அமெரிக்க உளவு விமானம் இது என ஈராக் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 4 பாகிஸ்தானிய இராஜதந்திரிகளை வெளியேறுமாறு இந்தியா உத்தரவு!

புதுடெல்கியிலுள்ள பாகிஸ்தானிய இராஜதந்திரிகள் நால்வரை, இரு நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்தியா கோரியுள்ளது.

இதுபற்றித் தகவல் வெளியிட்ட வெளியுறவுப் பேச்சாளர் நவ்தேஜ் சர்னா - பாகிஸ்தானிய இராஜதந்திரிகள் நால்வரும் இராஜக உறவுமுறைகளுக்கப்பால், புதுடெல்கியிலிருந்து செயற்பட்டமையாலேயே இந்தியா அவர்களை வெளியேறுமாறு கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இஸ்லாமாபாத்திலுள்ள சிரேஷ்ட இந்திய இராஜீக உத்தியோகத்தரை, பாகிஸ்தான் சிரமத்திற்குள்ளாக்கியதன் பழிவாங்கலாகவே இவ்வெளியேற்ற உத்தரவு அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஐவரிக்கோஸ்டில் இரு பிரெஞ்சு படைவீரர்கள் காயம்

ஐவரிக்கோஸ்டில் போராளிகள் தாக்கிய வெவ்வேறு சம்பவங்களின் போது இரண்டு பிரெஞ்சுப் படைவீரர்கள் காயமடைந்துள்ளனர். பிரெஞ்சுப் படையணிகள், ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோதே மேற்படி தாக்குதலகள் இடம்பெற்றுள்ளன.


ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த




10.30, 2.30, 6.00,9.30 (சி-398)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.



நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புநே.)

அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த

உல்லாசம்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி

TOMB RAIDER (சி-397)


## இன்றைய நாள் இனிய நாள்

**23-01-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- காரியசித்தி, தனலாபம், பிரயாணக் கஷ்டம், பொருள் விருத்தி. |
| இடபம் | :- புத்திக்கேடு, பொருட்சேதம், சிறைப்பயம், மனக்கிலேசம். |
| மிதுனம் | :- காரியனுகூலம், லட்சுமிகடாட்சம், தனவரவு, குடும்பச்சிறப்பு. |
| கர்க்கடகம் | :- தொழில் சிறப்பு, தேகசுகக்குறைவு, திரவியலாபம், அதிகநன்மை |
| சிங்கம் | :- பணச்செலவு, பெண்களால் அவமானம், தேகசுகம், திரவியலாபம். |
| கன்னி | :- தனவரவு, குடும்பச் சிறப்பு, தொழில் உறுதி, பெரியோர் ஆதரவு. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- கெட்ட சகவாசம், மனவியாகூலம், பிரயாணக் கஷ்டம், செலவு. |
| விருச்சிகம் | :- காரியவெற்றி, அனுகூலம், உறவினர் நண்பர்களால் உதவி. |
| தனு | :- பொருட்சேதம், பயம், தேகசுகம், கலகம், புத்திக்குறைவு. |
| மகரம் | :- லட்சுமீகரம், தனலாபம், குடும்பச்சிறப்பு, களஸ்திரசுகம். |
| கும்பம் | :- ஊறுபாடு, தேகசுகக்குறைவு, தனவரவு, குடும்பச் சந்தோஷம். |
| மீனம் | :- திரவியலாபம், பொருள்வரவு, சிநேக நன்மை, குடும்பச் சிறப்பு. |

# அமைதி முயற்சி பற்றி இந்தியா குழப்பம்; கதிர்காமர் புதுடெல்கியில் அறிவிப்பு!



(புதுடெல்கி)

தம்மைப் பூரணமாக நம்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மீது விடுதலைப் புலிகள் சவாரி செய்து வருவதாகவும் - இதனால் அயல்நாடான இந்தியா அமைதி முயற்சிகள் பற்றிக் குழப்பமடைந்திருப்பதாகவும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகரும் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

புதுடெல்லியில் அவர் இந்தோ - ஏஷியன் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது -

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் முக்கிய அரசியற்பிரச்சினைகளைப் பேசுவதற்குத் தாமதிப்பதன் காரணம் - அது அமைதி முயற்சிகளைக் பாதிக்கும் என்பதே.

குதிரையும் வண்டியும் கதையில், இப்போது வண்டியே முன் செல்கின்றது. நாங்கள் குதிரைதான் முன்செல்ல வேண்டும் என விரும்புகின்றோம்.

20 வருடங்கள் சென்றுவிட்டன. இனி கலந்தாலோசிப்பதற்கு எதுவுமில்லை. ஏற்றுக்கொள்ளக் கூடிய சகல தீர்வுகளும் மேசையில் கிடக்கின்றன. அதை விரைவாக எடுக்காமலிருப்பது ஏன்? என்றும் கதிர்காமர் கேட்டார்.

தற்போதுள்ள யுத்த நிறுத்தம் புலிகளுக்கே சாதகமானது. இராணுவத்தினருக்கு இதனால் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை நான் ஆரம்பம் முதலே கூறிவருகின்றேன்.

விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்தியே வருகின்றனர். தமக்கான தாயகம் ஒன்றை உருவாக்குவதற்கே அவர்கள் அனைத்தையும் மேற்கொள்கின்றனர்.

நோர்வே நாட்டவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நல்லதையும் செய்கிறார்கள். இதேவேளை, நல்லன அல்லாதவற்றையும் செய்கின்றனர் என்றும் கதிர்காமர் தெரிவித்தார்.

புதுடெல்கியில் தரித்திருந்தபோது- கதிர்காமர் அங்கு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா உட்படப் பலரையும் சந்தித்திருந்தார்.

## நவீன மீன்சந்தை நெல்லியடியில்

நெல்லியடி நவீன மீன்சந்தை வேலைகள் யாவும் முடிவடையும் நிலையில் உள்ளன. விரைவில் இம் மீன் சந்தை புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்குமெனப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (116)

## இயக்குநர் சபைத் தெரிவுக்கூட்டம்

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் புதிய இயக்குநர் தெரிவுக் கூட்டம் வரும் பெப்ரவரி இரண்டாந் திகதி மு.ப. 10 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் தலைவர் சு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (113)

## செம்பியன்பற்றில் ஐஸ் தொழிற்சாலை நிறுவக் கோரிக்கை!

வடமராட்சி கிழக்கு- செம்பியன் பற்றில் ஐஸ் கட்டித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மீனவர்கள், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (01)

# கண்ணி வெடி ஒழிப்பு மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்கள் வன்னிக்கும் செல்வார்கள்

### தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதுடன் கண்ணிவெடி அகற்றலையும் பார்வையிடுவர்

கண்ணிவெடி ஒழிப்புக்கான கண்காணிப்பாளர்களின் ஆசிய பசுபிக் பிராந்திய மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு இம்மாதம் 29 ஆம் திகதி அல்லது 30 ஆம்திகதி இடம்பெறலாம் என்று கண்ணிவெடி ஒழிப்புக்கான இலங்கை இயக்கத்தின் இணைப்பாளர் மாதம்பாகம் அஸாஜி நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ள இருபது நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வரவிருப்பதாகவும், இவர்கள் புலிகள் கண்ணிவெடிகளை அகற்றும் முறைகளை ஆராய்வர் என்றும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களைச் சுரண்டும் 'சுரண்டல்' சீட்டுக்கள்

## யாழ்ப்பாணத்தில் அமோக விற்பனை

(நெல்லியடி)

யாழ்.குடாநாட்டில் சுரண்டல் முறையிலான அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களின் விற்பனை அதிகரித்து வருகின்றது.

தெற்கில் இருந்து வந்த ஒரு விற்பனை வாகனமே இந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிலுப்பில் ஈடுபட்டுள்ளது.

இந்த வாகனத்தைச் சூழ எப்பொழுதுமே அதிக சனக்கூட்டம் காணப்படுகின்றது.

அதிலும் பாடசாலை செல்லும் மாணவர்களே இவ்வதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். (13)

# தனியார் மயப்படுத்தப்படும் மக்கள் வங்கியால் கவலை!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

(கொழும்பு)

மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்த எடுக்கும் முயற்சிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா கவலை தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் பலர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப் பிரேரணைகளை முன்வைத்து செல்வாக்குகளைப் பிரயோகித்தபோதிலும் இவ்வாறு நடப்பதற்கு இடமளிககப்படவில்லை.

மக்கள் வங்கி இலாபம் ஈட்டுவதற்கு உருவாக்கப்படவில்லை. மக்களுக்குச் சேவை செய்வதற்கே நிறுவப்பட்டது.

இவ்வாறு, மக்கள் வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியைப் பொதுக் கம்பனியாக மாற்றுவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்க பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் சோமச்சந்திர ஜனாதிபதிக்கு கூறினார்.

அரசியல் தலையீடு காரணமாகவே வங்கி இலாபமீட்டவில்லை என்றும், 4 நபர்களினால் 600 பில்லியன் ரூபா கடன் பெறப்பட்டுள்ளதாகவும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# அதாவுல்லா மீதான தாக்குதல் புதிய விசாரணைக்கு உத்தரவு

நெடுஞ்சாலைகள் அமைச்சரும், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அரசியல் வைரியுமான ஏ.எல்.எம்.அதாவுல்லா மீது கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தாக்குதலொன்று தொடர்பாக தற்போது புதிய விசாரணைக்கு உத்திரவிடப்பட்டிருக்கின்றது.

கடந்த டிசம்பர் முதலாம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பற்றிய குழப்பம் நிலவியவேளை, கலதாரி ஹோட்டேலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்திலிருந்து அதாவுல்லா புறப்பட்டபோது நடாத்தப்பட்ட தாக்குதல் பற்றியே புதிதாக விசாரிக்கப்படவுள்ளது.

மேற்படி சம்பவத்தின்போது, அதாவுல்லாவினதும், ஆதரவாளரினதும் வாகனங்கள் பல - ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர்களால் சேதமாக்கப்பட்டன.

புதிய விசாரணைக்கான உத்தரவை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவே பொலிஸ்மா அதிபருக்கு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## உலர் உணவு பெறுவோர் விபரம் மீளாய்வு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உலர் உணவு பெறுவோர் விபர மீளாய்வு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெறுகின்றது.

இதில்- உதவி அரச அதிபர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகளும் ஈடுபட்டு வருகின்றனர். (113)

## ஈவினைப் பாடசாலைக்கு புதிய அதிபர்

(ஊரெழு)

ஈவினை அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்குப் புதிய அதிபராக எஸ்.சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய ந.ஜெயக்குமரன் மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு உப அதிபராக இடமாற்றம் பெற்றதை அடுத்தே புதிய அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளது. (96)

### ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின்

# சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் தலைவராக அமைச்சர் மகிந்த சமரசிங்க

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் சர்வதேச நாடாளுமன்றச் சங்கத் தலைவராக அமைச்சர் மகிந்த சமரசிங்க ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சங்கத்தின் 100 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றபோது 150 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற அங்கத்தவர்கள் சமரசிங்கவைத் தெரிவுசெய்தனர்.

ஆசிய நாட்டவர் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

# வன்னிப் பகுதிக் கல்வி நிலைமை உலக வங்கிக் குழு நேரில் ஆராயும்

(வவுனியா)

உலக வங்கியின் அதிகாரிகள் வன்னிப்பிரதேசக் கல்வித்திணைக்கள உயரதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இவர்கள் வவுனியா வடக்கு, நெடுங்கேணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளாகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் தனித்தனியாகக் கலந்துரையாடல்கள் நடாத்திவருகின்றனர்.

இக்கலந்துரையாடலின்போது பாடசாலையின் பௌதீக வளங்கள், யுத்தங்காரணமாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் புனரமைப்பு, ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

உலக வங்கிக்குழுவுடன் சிறான் அமைப்புப் பணிப்பாளர் செல்வின், தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோா வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளரையும் கல்விப்பகுதி திட்டமிடல் அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருநதனர்.

இவர்கள் இன்று முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளார்கள். நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மலரவன் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நிதி உதவிபெறத் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிவழங்கும் நிகழ்வில் அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவேல் அடிகளார் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே முதலாவது மீள்குடியமர்வு அடுத்தமாதம்

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் அடுத்தமாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஓமந்தைப் பகுதியில் 232 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்.

இக்குடும்பங்களுக்கு, குடும்பமொன்றுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# 18 வருடங்களாக மூடப்பட்டிருந்த அநுராதபுரம் - ஏ 9 வீதி திறப்பு

(கொழும்பு)

ஏறத்தாழ பதினெட்டு வருடங்களுக்குப் பின்னர் அனுராதபுரம் நகரப்பகுதியையும் ஏ-9 வீதியையும் இணைக்கும் பெருந்தெரு மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் புகையிரத நிலையத்திற்கும், எரிபொருள் விநியோக நிலையத்திற்கும் பாதுகாப்பு வழங்குவதற்கெனக்கூறி, இந்த வீதி 1985 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இதையடுத்து தொல்பொருள் திணைக்களத்தின் பாதுகாப்பிலிருந்த பகுதிக்கூடாகப் புதிய பாதை திறக்கப்பட்டு- அதுவே இவ்வளவு காலமும் பாவனைக்கென அனுமதிகக்கப்பட்டிருந்தது.

# வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி!

ஏனென்றால் - தொல்லியல் திணைக்களத்தை இயக்குபவர்களாக, இலங்கையிலுள்ள பிரபல்யம் வாய்ந்த பௌத்த மகா தேரர்கள் விளங்குவதனால், தொல்லியல் என்ற அறிவியற்துறையானது இன்று அதன் உண்


சாணைக்கல் அம்மியும் குழவியும்


கல்லாகிப்போன எலும்புகள்

மையான நோக்கில் இருந்து விலக்கப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டு அடிப்படைவாதிகளினுடைய கருத்துக்களைக் காவிச் செல்கின்ற ஓர் ஊடகமாக மாற்றப்பட்டதைக் காண்கின்றோம். இது எப்பொழுது, எவ்வாறு அச்சிக்கல்களில் இருந்து விடுபடும் என்பதைப் பொறுத்துத்தான், இலங்கையில் ஒரு பல்தேசிய மொழி பேசுகின்ற மக்கள் கூட்டம் சமதான முறையில் வாழக்கூடிய ஒரு சுவாரசியமான காலம் உருவாகும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, பல்கலைக்கழக நோக்கங்களில் இரண்டு பிரதான நோக்கங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன.

1. பல்கலைக்கழகம் அமைந்த சுற்றாடலில் பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணவேண்டியது.
2. பிராந்தியத்து மக்களினுடைய சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் பங்குகொள்கின்ற ஓர் அங்கமாகவும், தொல்லியல் ஆய்வாளர்களும், கல்விமான்களும் இப்பிரதேசத்து அரும் பொருட்களைப் பாதுகாப்பதிலும் கவனமெடுக்க வேண்டும்.

இந்தப் பின்னணியில்தான் 1974 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதிலிருந்து தொல்லியல் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு வரலாறு, தொல்லியல்துறை இணைந்து நடாத்திய ஒரு மாபெரும் அகழ்வாராய்ச்சி ஆனைக்கோட்டையில் நடந்தது. இங்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டினுடைய புராதன குடியிருப்பு பற்றிய எச்சத்தை மட்டுமல்லாது, யாழ்ப்பாணத்து தமிழ் மக்களுக்குரிய அரச பாரம்பரியம் தொடர்பான புதிய செய்தியைக்கூட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உலகுக்கு வெளிப்படுத்த உதவியது. அதற்குப் பின்னர் யாழ்ப்பாண ஆய்வாளர்கள் எவரும், இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியின்றி எங்கும் அகழ்ந்து, வெட்டிப் புராதன தொல்பொருட்களை மீட்டெடுத்து அவற்றுக்கு விளக்கங்கண்டு, அவற்றைப் பிரசுரித்து மக்களினுடைய இருப்பை வெளிப்படுத்துவதற்கு உரிமை அற்றவர்கள் என்றநிலையில் தொல்லியல் ஆய்வாளர்களுக்குத் தடைகளை

## பகுதி 3

விதித்திருந்தது. அந்தநிலைமை இப்பொழுதும் தொடர்கின்றது. விசேட அனுமதி பெற்றுத்தான் எமது துறை அகழ்வுப் பணிகளிலேயோ அல்லது மேலாய்வுப் பணிகளிலேயோ ஈடுபடவேண்டிய சூழல் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலைதான், கந்தரோடை மீதான எமது பார்வையைத் தளர்ச்சியடையச் செய்துள்ளது என்பதனைக் குறிப்பிடுகின்றோம். இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்ததன் பின்னரும், கந்தரோடையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் சான்றுகளை முழுமையாகக்கொணடு, நாம் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டுக்கு மாபெரும் பொருட் காட்சியை ஏற்படுத்தியிருந்தோம்.

இதன்படி கந்தரோடை பற்றிய முக்கியத்துவத்தை நாம் பொதுமக்களுக்கு ஏற்கனவே காட்டியிருந்தோம். இருந்தும் பொதுமக்களினுடைய நோக்கில் கந்தரோடை மீதான அதனுடைய முக்கியத்துவம் இற்றைவரை உணரப்படாது இருப்பதற்கும், பொதுமக்களினுடைய சிந்தனையிலிருந்து கந்தரோடை அந்நியப் படுத்தப்பட்டிருப்பதற்குமான காரணங்களை ஆராயும்பொழுது, அடிப்படையிலே நமக்கு ஊட்டப்பட்ட கல்வியினுடைய முறைமைதான் காரணமாகும்.

ஏனென்றால் - பெரும்பான்மை சிங்கள மக்களை அரவணைத்த வகையில் உருவாக்கப்படுகின்ற கல்விக் கோட்பாட்டுப் பாடவிதான நடைமுறைகள்தான், தமிழ் மக்களைத் தமது பண்பாட்டு மையங்


புராதன நகரக் கட்டுமானத்தின் புதைந்துபோன செங்கற்கட்டடத்தின் வெளிப்பாடு.

கள் மீதான ஒரு பார்வையை அந்நியப்படுத்தச் செய்ததென்றால் அதில் மிகையில்லை.

**செ.கிருஷ்ணராஜா**
**நேர்காண்பவர் - சாந்தகுமார்.**

அந்த வகையில்தான் - கந்தரோடை மிகநீண்ட காலமாகவே சிங்கள - பௌத்த மக்களினுடைய மையம் என்று சொல்லப்பட்டு வந்ததன் பின்னணியில், தமிழ் மக்கள் இன்றும் அதனை அவ்வாறே சிந்தித்துக் கொண்டிருப்பதன் காரணத்தினால், அந்த மையம் கைவிடப்பட்ட ஒரு மையமாகவே இருந்து கொண்டிருப்பதனை நாம் காண்கின்றோம். ஆனால், தொல்லியல் ஆய்வில் தீவிர நாட்டமும், அக்கறையும் கொண்டுள்ள நாம் அவ்வாறு அலட்சியமாக இருந்துவிட முடியாது.

(அடுத்த வாரம் தொடரும்)

# கவலைகளின் தீவு டியாகோ கார்சியா


தீவில் பொதுக் கட்டடமொன்றின் தோற்றம்


வான்நோக்கு - குதிரை லாடன்?
விரிந்து படுத்திருக்கும் நாகம்?

ஈராக் மீதான போர் ஆரம்பமானால் திருமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பயன்படுத்தலாம் என்ற ஊகம் சில செய்தியூடகங்களில் இவ் வாரம் இடம்பெற்றுள்ளது. எரிபொருள் நிரப்புகைக்காக இலங்கைத் தீவின் விமானதளங்களைத் தாங்கள் பயன்படுத்தலாம் என்ற அமெரிக்கத் தூதரின் அறிவிப்பு வேறு. இருப்பினும், அமெரிக்காவின் பாரிய தளமொன்று டியாகோ கார்சியாத் தீவில் இருப்பதால் அப்படியான தேவை அமெரிக்காவிற்குத் தற்போதைக்கு இல்லை. ஆனாலும், இலங்கைத்தீவிற்கு நேரிடைத் தெற்காக உள்ள டியாகோ கார்சியாத் தீவு இன்றைய தேதியில் பிரச்சினைக்குரிய ஒரு பிரதேசமாக மாறிவருகிறது. ஊடக உலகின் கவனத்திற்கு வராத இவ்விடயம் தொடர்பான சிறப்புப் பார்வையாக இக கட்டுரையை எடுத்துச் செல்வோம்.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் சாகோஸ் தீவுகள் என அழைக்கப்படும் தீவுக்கூட்டம் அமைந்துள்ளது. இத்தீவுகளில் பெரிய தீவே டியாகோ கார்சியா (24 சதுர மைல்). மொரிசியஸ் தீவுகளோடிணைந்த ஒரு ஆட்சிப் பிரதேசமாகப் பேணப்பட்டு வந்த இத்தீவுக் கூட்டத்தில், இலோய்ஸ் (ஆபிரிக்க, இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள்) இன மக்கள் வாழ்ந்து வந்தனர். சோவியத் சாம்ராஜ்யம், மத்தியகிழக்கு, இந்துமா சமுத்திரம் மற்றும் ஆபிரிக்கா ஆகியவற்றைத் தனது கண்காணிப்பிற்குள் வைத்திருப்பதற்கு மிகச்சிறந்த பிரதேசமாக விளங்கிய இத்தீவுகளில் பிரித்தானியக் கடற்படை 1950 களில் தனது பிரசன்னத்தை ஆரம்பித்தது. 1960 களில் சோவிய - அமெரிக்க பனிப்போர் வலுத்தபோது இத்தீவுகள் தொடர்பான பயன்பாட்டில் அமெரிக்காவும் அக்கறை கொண்டது.

இது தொடர்பாக 1964 இல் மிக இரகசியப் பேச்சுவார்த்தைகளில் பிரித்தானியாவுடன் ஈடுபட்டது அமெரிக்கா. மேற்படி தீவுகளைத் தனது பயன்பாட்டிற்கு விடும் பட்சத்தில் பிரித்தானிய நீர்மூழ்கிகளுக்கான 'பொலாரிஸ்' அணுகுண்டு விநியோகத்தில் 11 மில்லியன் டொலர்கள் மானியம் வழங்குவதற்குச் சம்மதித்தது. உலகின் கண்களுக்கு மட்டுமல்ல, அமெரிக்கக் காங்கிரஸ் மற்றும் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் பார்வைக்குக் கூடச் செல்லாமல் மேற்கொள்ளப்பட்டதே இந்த இணக்கம். அமெரிக்காவின் வேண்டுகோளிற்குக் கொள்கையளவில் இணங்கிய பிரித்தானியாவிற்கு, அதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருந்தது. அதாவது, மொரிசியஸின் ஆட்சியமைப்பிற்குள் உள்ள இத்தீவுகளைப் பயன்பாட்டிற்கு விடும்பட்சத்தில் சட்டப்பிரச்சினை ஏற்படும் என்பதே அது.

எனவே, அதற்கான பரிகாரமாக மொரிசியசுடன் ஒரு நயவஞ்சகப் பேரத்தில் ஈடுபட்டது பிரித்தானியா. டியாகோ கார்சியா தீவுத் தொகுதியைப் பிரித்தானியாவிற்கு விட்டுக் கொடுத்தால், அதற்கான பிரதியுபகாரமாக, மொரிசியஸ் மக்கள் சுய-அரசு அமைக்கும் உரிமத்தை வழங்குவதாக ஆசைகாட்டியது பிரித்தானியா. மொரிசியஸிலிருந்து 1200 மைல் தொலைவில் இருந்த இத்தீவுகளின் மக்கள் அவர்களைவிட கருமை கூடியவர்களாகவும், வேறு மொழி பேசுபவர்களாகவும் இருந்த காரணத்தால், மொரிசியஸின் மனதை வெல்வதில் பிரித்தானியாவிற்குச் சிரமமிருக்கவில்லை. எனவே இதற்கான உடன்படிக்கை 1965 இன் இறுதிப்பகுதியில் எட்டப்பட்டு, இத்தீவுத் தொகுதி ஐ.நா. சாசனத்திற்கு முரணாகப் பிரித்தானியாவின் ஆட்சிக்குக் கீழ்க் கொணரப் பட்டது.

இவ்வாறு பிரித்தானியாவால் கையகப்படுத்தப்பட்ட இத்தீவுத் தொகுதி தொடர்பான அமெரிக்காவின் பயன்பாட்டு உடன்படிக்கையில் 1966 ஆம் ஆண்டு இருநாடுகளும் கைச்சாத்திட்டன. 50 வருட பயன்பாட்டிற்கும், அமெரிக்கா விரும்பும் பட்சத்தில் மேலும் 20 வருட நீடிப்பிற்கும் இடமளித்த மேற்படி உடன்படிக்கை 'வழமையான பாதுகாப்பு ஏற்பாடு' என்ற வகையிலேயே வெளியுலகிற்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும், பூர்வீகக்குடிகளான 1,500 இற்கு மேற்பட்ட இலோய்ஸ் மக்கள் தொடர்ந்தும் அத்தீவுகளில் இருப்பதை பாதுகாப்பிற்குக் குந்தகம் என்ற காரணத்திற்காக அமெரிக்கா விரும்பவில்லை. பிரித்தானியாவிற்கும் அமெரிக்காவின் வேண்டுகோள் ஏற்புடையதாகவே இருந்தது. எனவே, உலகின் கண்களுக்குத் தெரியாமல் இதற்கான வேலைகளைப் பிரித்தானியா ஆரம்பித்தது.

முதற்கட்டமாக, தமது தேவைகளுக்காக இத்தீவுகளை விட்டு மொரிசியஸ், சீசெல்ஸ் தீவுகளிற்குச் சென்




றோரை மீண்டும் உள்ளேவரப் பிரித்தானியா அனுமதி மறுத்தது. 1966 இல் ஆரம்பித்த மேற்படி நடவடிக்கையில் கணிசமானோர் வெளியேற்றப்பட்டனர். மீதமிருந்தோர் 1972 ஆம் ஆண்டில் வலுக்கட்டாயமாகக் கப்பலில் ஏற்றி மொரிசியஸிற்கு அனுப்பப்பட்டனர். இவர்களை ஏற்பதற்கான சன்மானமாக 3 மில்லியன் பவுண்களைப் பிரித்தானியா மொரிசியஸிற்கு வழங்கியிருந்தது. உலக நாடுகள் மற்றும் ஐ.நாவின் கவனம் திரும்பாமல் இருப்பதற்காக போலியான ஆவணத் தயாரிப்புக்களில் ஈடுபட்டு இம்மக்கள் வேலைக்காகத் தற்காலிகமாக அத்தீவுகளில் குடியேற்றப்பட்டவர்கள் என்ற சாரமே வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதன்பின் முழுதாக இராணுவமயப்படுத்தப்பட்ட இத்தீவு, ஒரு பரிபூரண கட்டளைத் தளமாகத் தோற்றம் பெற்றது. இத்தளத்திலிருந்தவாறே வளைகுடாத் தாக்குதலுக்கான நேரடிப் பறப்புக்கள், அதுபோன்றே சோமாலியா மீதான இராணுவ நடவடிக்கை, ஆப்கான் மீதான யுத்தத்திற்கான பறப்புக்களும், பின்தள வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. 8,800 மைல்களைப் பறப்புத் தூரமாகக் கொண்ட ஸ்ரெல்த் பி-52 மற்றும் பி-1 ரக விமானங்கள் தரிப்பிடமாகவும் இத்தளம் மாறியதே இதற்கான காரணம். அத்தோடு, பிரச்சினைக்குரிய பிரதேசக் கடற்பரப்புக்களில் நிலைகொண்டுள்ள விமானந்தாங்கிக் கப்பல்கள், குறுந்தூர ஓட்டமுள்ள விமானங்களின் தேவையைப் பூர்த்தி செய்தன. மறுபுறமாக இதுவே இலங்கைத்தீவின் மீதான பயன்பாடு தொடர்பான அவர்களின் அக்கறையைக் குறைத்தது.

இத்தீவுகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட மக்கள் மொரிசியஸ் தீவில் மிகவும் நலிந்த வாழ்வுநிலைக்குள் தள்ளப்பட்டனர். அடிநிலைத் தொழிலாளர்களாகவே வாழ்க்கையை ஓட்டுவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவர்களது பிரச்சினை தொடர்பான கேள்விகளே எழாவண்ணம், "இத்தீவுகளில் பூர்வீகக் குடிகளென யாரும் இருந்ததற்கான சான்றுகளோ, பலாத்கார வெளியேற்றம் நடைபெற்றதற்கான சான்றுகளோ எமது கோப்புக்களில் இல்லை" எனப் பிரித்தானியப் பாதுகாப்புத்துறைச் செயலர் 1974 இல் அறிவிக்குமளவிற்கு கபடம் நிறைந்ததாக இருந்தது அவர்களது திட்டம். மொரிசியஸ்கூட மீண்டும் இத்தீவுகளைப் மீளப்பெறும் கோரிக்கைகளைப் பிரித்தானியாவிடம் விடுத்தாலும், அதன் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

எனினும், இவ்வெளியேற்றத்தின் 30 ஆண்டுகளின் பின், 1999 இல் இந் நடவடிக்கைக்கு எதிராக பிரித்தானிய உயர்நீதிமன்றத்தில் பூர்வீக குடிகள் வழக்குத் தாக்கல் செய்தனர். 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பில் இத்தீவுகளின் சொந்தக்காரர்களான இலோய்ஸ் இனமக்களின் வெளியேற்றம் சட்டவிரோதமானது என்றும், இம்மக்கள் தமது தாயகத்திற்குத் திரும்புவதற்கு உரித்துடையவர்கள் என்றும் தீர்ப்பளித்ததோடு, அவர்கள் மீளத்திரும்புவதற்கு ஏதுவான நடவடிக்கைகளைப் பிரித்தானியா உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது. இனவாதத்தின் ஒரு பக்கத்தை உலகிற்கு உரைத்த இத்தீர்ப்புக்கு எதிராக பிரித்தானியா மனுத்தாக்கல் செய்தபோதும் அதனால் வெற்றி பெற முடியவில்லை.

**சுதர்மா**

எனவே, டியாகோ கார்சியா தவிர்ந்த ஏனைய தீவுகளிற்கு பூர்வீகக் குடிகள் (ஏறக்குறைய 5,000 பேர்) மீண்டும் வருவதற்கு அனுமதியளிப்பதாகப் பிரித்தானியா கொள்கையளவில் இணங்கியது. ஆனால், டியாகோ கார்சியா தீவிற்கும் தாம் செல்ல அனுமதிகோரி, கடந்த ஆண்டு ஒக்டோபரில் மீண்டுமொரு வழக்கை பூர்வீகக் குடிகள் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு வெற்றிபெறுமிடத்து வேறு இடமொன்றிற்கு மாற அமெரிக்கா நிர்ப்பந்திக்கப்படலாம் எனக் கருதினாலும், அதற்கான சாத்தியக்கூறு மிக அரிதே. அத்தோடு, ஐ.நாவின் சாசனத்திற்கு எதிராகவே இத்தீவுகளை பிரித்தானியா மொரிசியஸிலிருந்து பெற்றது. மொரிசியஸ் இதனை விவகாரமாக்கினால் அது பிரித்தானியாவிற்குப் பாதகமாக அமையும்.

ஆக மொத்தம், 2016 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு இத்தீவுகளின் பயன்பாட்டையும், 20 வருட நீடிப்பு உரிமையையும் அமெரிக்கா கொண்டிருந்தாலும், இது ஒரு குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தமல்ல. "பாதுகாப்புத்துறைப் பயன்பாடுகளுக்குத் தயாரானநிலையில் இத்தீவுகள் இருக்கும்" என்பதே அவ்ஒப்பந்தக் கரு. எனவே, ஆண்டாண்டுகளின் பின் இத்தீவு ஒரு விவகாரமாக அமெரிக்காவிற்கு அமைவு பெறலாம். அதன்போது, இத்தீவுத் தொகுதியின் மனித சஞ்சாரமில்லாத தீவுகளையோ அல்லது அல்ட்ப்ரா தீவு போன்றவற்றின் பயன்பாட்டைப் பரீட்சிப்பதற்கே அமெரிக்கா விரும்பும்.

# யாழ். குடாநாட்டில் அன்றும் இன்றும் கடற்தொழில் நடவடிக்கைகள்




தமிழின்பன்

இன்றைய அத்தியாயத்தில் சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.

சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் வலிகாமம் மேற்குப் பிரதேசமும், காரைநகர்ப் பிரதேசமும் உள்ளடங்குகின்றன. ஏற்கனவே நாம் கரைநகர்ப் பிரதேசத்தின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்த்திருந்தோம். எனவே இவ்வத்தியாயத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியின் கடற்தொழில் நடவடிக்கைகளை இன்று பார்ப்போம்.



வலிகாமம் மேற்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் கடற்தொழில் கிராமங்களாவன -

சுழிபுரம் மேற்கு, திருவடி நிலை, மூளாய் - பொன்னாலை, வட்டு. வடக்கு, வட்டு. கிழக்கு, அராலி- கிழக்கு, அராலி - தெற்கு, அராலி- மத்தி (ஊரந்தி), அராலி - மேற்கு என்பனவாகும்.

## அன்றும்

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் சுழிபுரம் மேற்கு, திருவடிநிலை போன்ற பிரதேசங்களிலேயே ஆழ்கடலில் தொழில் செய்ய முடியும். ஏனைய பிரதேசங்கள் ஆழங்குறைந்த பரவைக்கடல் பகுதிகளாகும். எனவே- சுழிபுரம் மேற்கு, திருவடிநிலை போன்ற பிரதேசக்கடலில் இயந்திரப்படகுகளைப் பயன்படுத்தி மீனவர் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

ஏனைய பகுதிகளான,

அராலி - கிழக்கு, அராலி - தெற்குப்பகுதி, வட்டுக்கோட்டை போன்ற இடங்களின் கடற்பரப்பில் மரபுசார்ந்த வள்ளங்களைப் பயன்படுத்தியே இப்பகுதி மீனவர் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

காரைநகரையும், வலிகாமம் மேற்குப் பகுதியையும் இணைக்கும் பாலத்தின் இருபக்கக் கடலிலும், மூளாய், பொன்னாலைக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடுகின்றனர். இப்பகுதியில் பெருமளவு களங்கண்டி எனப்படும் வலைகளே பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் வீச்சு வலைத் தொழிலிலும் சிறிதளவு மீனவர்கள் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் தற்போது தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் கடற்தொழிற்கலங்களின் விபரங்கள் வருமாறு,

| | | |
|---|---|---|
| கட்டுமரம் | - | 68 |
| வள்ளம் | - | 77 |
| இயந்திரமாக்கப்பட்ட பிளாஸ்ரிக் படகு | - | 15 |

இப்பிரதேச கடற்பரிசோதகர் பிரிவினுள் உள்ள கடற்தொழிலாளர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| பிரதேசம் | மீனவக் குடும்ப எண்ணிக்கை | கடற்தொழிலாளர் எண்ணிக்கை | குடித்தொகை |
|---|---|---|---|
| 1. சுழிபுரம் மேற்கு | 280 | 239 | 1,264 |
| 2. திருவடிநிலை | 115 | 75 | 517 |
| 3. மூளாய் | 40 | 30 | 132 |
| 4. அராலி கிழக்கு | 306 | 271 | 1,377 |
| 5. அராலி தெற்கு | 65 | 40 | 270 |
| 6. அராலி மேற்கு | 90 | 95 | 390 |
| 7. அராலி மத்தி | 60 | 75 | 250 |
| 8. சங்கானை | 51 | 30 | 210 |
| 9. வட்டுக்கோட்டை | 100 | 75 | 480 |

இப்பிரதேசத்தில் சராசரியாக 28,350 Kg மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவற்றில் குறிப்பாக- அராலி கிழக்குப் பகுதியில் பிரதானமாக இறாலே பிடிக்கப்படுகின்றது. மாதாந்தம் சராசரியாக 3,000 Kg இற்கு மேற்பட்ட இறால் இப்பகுதியில் பிடிக்கப்படுகின்றது.

இறாலினை விட இப்பிரதேசத்தில் பிடிக்கப்படும் ஏனைய மீன் இனங்களாவன.

பாரை, இறால், சுறா, திருக்கை, சூடை, கணவாய் என்பனவாகும்.

## இன்றும்

இப்பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

*1. மீள்குடியேற்றம்*

மூளாய் - பொன்னாலை, திருவடி நிலை பிரதேச கடற்தொழிலாளர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறவில்லை. இவர்கள் அகதிமுகாம்களில் தமது வாழ்க்கையை நடாத்துகின்றனர். குறிப்பாக, திருவடிநிலையைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் சுழிபுரம் கிழக்குப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் வாழ்கின்றனர். எனவே, இம்மக்களைத் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்ற வேண்டிய தேவை மிகவும் அவசியமானதாகும்.

*2. நவீன மீன்பிடித் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படாமை.*

குறிப்பாக இப்பிரதேசத்தில் பெருமளவு மீன்வளம் காணப்படுகின்றது. அத்துடன், அராலியில் பெருமளவு இறால் உற்பத்தியாகின்றது. ஆனால் இப்பிரதேச மக்கள் எதுவித நவீன நுட்பங்களையும் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதில்லை. நவீன தொழில் நுட்பத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற அக்கறையின்மையும் இங்கு காணப்படுகின்றது.

இந்த வகையில், யாழ்.குடாநாட்டு மீனவர்களின் நவீன தொழில்நுட்பம் பற்றிய அறிமுகம் இப்பிரதேச மீனவருக்கு மிக முக்கியமானதாகும்.

*3. மீன்களைப் பதனிடும் தொழிற்சாலைகள் இன்மை*

அராலி, வட்டுக்கோட்டை, பொன்னாலைப் பிரதேசங்களில் பெருமளவு இறால் பிடிக்கப்படுகின்றபோதும் இறால் பதனிடும் தொழிற்சாலை இப்பிரதேசத்தில் அமைக்கப்படவில்லை. பிடிக்கப்படும் இறால் பதனிடப்பட்டு அதிகரித்த விலைக்கு விற்கப்படுமாயின் இப்பிரதேசத்தின் மீனவர்களைப் பெருளாதார ரீதியாக மேம்படுத்தலாம்.

*4. கல்வியறிவு குறைவு*

இப்பகுதி மீனவர்களின் கல்வியறிவு குறைவாக இருப்பதனால் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகளைச் சரியாகச் செய்து சங்கங்களை வழிநடத்த முடியாமல் இருக்கின்றனர். இதேவேளை - கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களை மேலும் வளர்ச்சியடைய வைக்க முடியாமலிருக்கிறது.

எனவே, கல்வியறிவு பற்றியும், மீன்பிடித்தொழிலில் நவீன தொழில்நுட்பப் பிரயோகம் பற்றியும், கல்வியூட்டுவது இப்பிரதேச மீனவரின் அபிவிருத்தித் தொழிலில் எடுக்க வேண்டிய பிரதானமான நடவடிக்கையாகும்.

தற்பொழுது முன்னெடுக்கப்படவுள்ள புனர்வாழ்வுப் பணிகளின்போது இப்பகுதி மீனவர்களுக்கு மேற்கூறிய விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

(தொடரும்)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | திருநெல்வேலி | சுன்னாகம் | ஊர்காவற்றுறை | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 60/- | 70/- | 50/- | 40/- | 70/- | 70/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 65/- | 70/- | * | 70/- | 70/- |
| கத்தரிக்காய் | 40/- | 50/- | * | 40/- | 30/- | 50/- |
| பாகற்காய் | 80/- | 75/- | 70/- | * | 70/- | 70/- |
| வெண்டிக்காய் | 30/- | 40/- | 35/- | 40/- | 30/- | 40/- |
| கரட் | 40/- | 40/- | 50/- | 40/- | 35/- | 50/- |
| பீற்றூட் | 40/- | 35/- | * | * | 40/- | 50/- |
| வெங்காயம் | 30/- | 40/- | 30/- | 35/- | 30/- | 30/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 60/- | 70/- | 50/- | 70/- |

# தொழில்வங்கி



| | | | |
|---|---|---|---|
| நிறுவனம்:- | சமூக விஞ்ஞான ஆய்வு நிறுவனம் | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் | ஸ்ரார் பீச் ஹோட்டேல் |
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | ஆய்வறிக்கை வரைபவர் | திட்ட முகாமையாளர் (கிழக்கு மாகாணம்) | அறைப் பணியாளர் (Room Boys) (கிழக்கு மாகாணம்) |
| அடிப்படைத் தகுதிகள்:- | முன்னனுபவம், ஆங்கிலம், தமிழ் மொழித்தேர்ச்சி. | அங்கீகரிக்கப்பட்ட பட்டச் சான்றிதழ், ஆங்கிலத்தில் தேர்ச்சி. | அரச அங்கீகாரம் பெற்ற ஹோட்டேல் முகாமைத்துவப் பயிற்சிநெறி. |
| விண்ணப்ப முடிவு திகதி | 31.01.2003 | 31.01.2003 | 31.01.2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்- " நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# குடாநாட்டு கைத்தொழில்களின் இன்றைய நிலை என்ன?

சென்ற வாரத் தொடர்ச்சி...

உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படும் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்காமையால் தென்னந்தோட்டங்கள் உள்ள பிரதேசங்களான வடமராட்சி கிழக்குப் பகுதிகள், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் சில பகுதிகள், வலிகாமத்தின் சில பகுதிகளில் தென்னைசார் உற்பத்திகள் வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் தென்னந்தோட்டங்களும் கவனிப்பின்றியுள்ளன.

அத்துடன், தற்பொழுது பிளாஸ்ரிக் பொருட்களின் அதிகரித்த கிடைப்பனவு காரணமாக மட்பாண்ட, பனை உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் (விற்பனை) பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், எறிகணை வீச்சு, குண்டுவீச்சு என்பவற்றாலும் பாதுகாப்பு அரண்கள், பாதுகாப்பு பதுங்குகுழிகளுக்காகவும் அண்மைக்காலத்தில் அதிகளவு பனை, தென்னை மரங்கள் தறிக்கப்பட்டன. இதனால் அவற்றினை நம்பி வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருந்த வறிய குடும்பங்கள் பல கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பாதிப்படைந்த குடும்பங்களைச் சரியாக இனங்கண்டு உரியமுறையில் அவர்களுக்கு நஷ்டஈடுகள் எவையும் இதுவரை பெரிதாக வழங்கப்படவில்லை. சுமார் 15 லட்சம் பனை மரங்கள் கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் அழிக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை மதிப்பீடு செய்துள்ளது. அத்துடன் இத்தறிக்கப்பட்ட பனை, தென்னை மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகைத் திட்டங்கள் விரைவாகச் செயற்படுத்தப்படவில்லை. அதில் அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ, தொண்டர் அமைப்புக்களோ பெரிதாக இதுவரையில் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை.



போரினால் அழிவடைந்திருக்கும் பனைவள ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு பகுதி.

எனவே, இக்குடிசைக் கைத்தொழிலை மேண்மேலும் வளர்க்க வேண்டுமாயின் இக் கைத்தொழில் உற்பத்திகளுக்குப் போட்டியாகத் தெற்கிலிருந்துவரும் பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இத்தகைய உற்பத்திகளில் ஈடுபடுவோருக்கான நஷ்டஈடுகள், கடன்திட்டங்கள் என்பவற்றை விரைவுபடுத்த வேண்டும். அத்துடன் அழிக்கப்பட்ட மரவளத்தை மீள்விப்பதற்கான மீள்நடுகைத் திட்டங்கள் விரைவாகவும் பாரிய அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் குடிசைக் கைத்தொழில்களை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

### யாழ். குடாநாட்டுக் கைத்தொழில்கள் அனுபவிக்கும் பொதுவான பிரச்சினைகள்

இதுவரையில் யாழ்.குடாநாட்டுக் கைத்தொழில்களினை அவற்றின் மூலதன அளவு, இடவசதி, தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் நான்கு வகைகளினுள் வகைப்படுத்தி அவற்றின் செயற்பாடுகள், அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றினைத் தனியாக எடுத்து ஆராயப்பட்டது. ஆயினும், பொதுவில் யாழ்.குடாநாட்டு கைத்தொழில்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகப் பல்வேறு பிரச்சினைகளைக் கூறிக்கொள்ள முடியும். அவை,

யாழ்ப்பாணக் கைத்தொழிலைப் பொறுத்தவரை அடிப்படைத் தேவைகள் தானும் இல்லாத நிலையை அல்லது சொற்ப அளவு மட்டுமே கிடைப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. தொழிற்சாலைகள் பல உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்படும் பகுதிகளுக்குள் அமைந்திருப்பதால் அங்கு எவரும் செல்லமுடியாத உள்ளது. அத்துடன் அழிக்கப்பட்ட அல்லது சேதமடைந்த தொழிற்சாலைகள் எவையும் திருத்தப்படாது அப்படியே இருக்கின்றன. இவற்றுக்கு உதாரணங்களாக, சீமெந்துக் கூட்டுஸ்தாபனம், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை, நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

மூலப்பொருட்களின் கிடைப்பனவைப் பொறுத்தவரையில் அவை போதியளவு கிடைப்பதில்லை. அத்துடன் கிடைக்கும் மூலப்பொருட்களும் விலை உயர்வாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற கைத்தொழில்களை வளர்ப்பதிலோ அல்லது செயற்படாத கைத்தொழில்களை மீள இயங்க வைப்பதிலோ பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன.

போக்குவரத்தினைப் பொறுத்தவரையில் வெளியிடங்களுக்கான போக்குவரத்தில் இன்றும் தடைகள் காணப்படுகின்றன. தொடர்ச்சியான போக்குவரத்து இன்மை, போக்குவரத்தில் உள்ள நேரவரையறைகள், சோதனை நடவடிக்கைகள் என்பன உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெறுவதில் காலதாமதம், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உரிய காலத்தில் விற்பனை செய்ய முடியாமை, சோதனை நிலையங்களில் உற்பத்திசெய்த பொருட்களை ஏற்றி இறக்குவதால் ஏற்படும் சேதங்கள் போன்ற பிரச்சினைகள் உருவாக வழிவகுக்கின்றது. அத்துடன் போக்குவரத்தில் இவ்வாறான தடைகள் போக்குவரத்துச் செலவை அதிகரிக்க, அவை பொருட்களின் உற்பத்திச் செலவை உயர்த்துகின்றன. இதனால் உற்பத்தி செய்த பொருட்களுக்கான விற்பனை விலையை உயர்த்த வேண்டிய தேவை எழுகின்றது. இவ்வாறு விற்பனை விலையை உயர்த்த இத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்வோரின் தொகை வீழ்ச்சிப் போக்கை அடைகின்றது. இதனால், இத்தகைய கைத்தொழில்கள் தமது வளர்ச்சிப்பாதையில் பின்னடைவுகள் சந்திக்க நேரிடுகின்றன. இத்தகைய பொருட்களின் விலைகளை உயர்த்தவில்லையாயினும் நட்டத்தினைச் சந்திக்க நேரிடுகின்றது.

தொழிற்சாலைகளை இயக்குவதற்கு இன்றியமையாததாகத் தேவைப்படுவது வலுத்தேவையாகும். ஆயினும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வலுத்தேவையானது இன்னமும் முற்றுமுழுதாகவும் சீராகவும் கிடைக்கவில்லை. இதனால் பல தொழிற்சாலைகள் முழுவினைத்திறனுடன் இயங்கமுடியாதநிலை காணப்படுகின்றது. அத்துடன் மின் விநியோகத்தைப் பொறுத்தவரை குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு முற்றுமுழுதாக மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இந்தப் பிரதேசங்களில் மின்சாரத்தை அடிப்படை வலுத்தேவையாகக் கொண்டுள்ள கைத்தொழில்கள் இயங்க முடியாதநிலையில் உள்ளன.

யாழ்ப்பாணக் கைத்தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் குறிப்பிட்டுக்கூறக்கூடியது - அரசினதும், அரச அதிகாரிகளினதும் அக்கறையின்மை ஆகும். இன்றும் புனர்வாழ்வு நிர்மாணப்பணிகள் ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றன. கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு இழப்பீடுகளோ, கடனுதவிகளோ பெரிதாக வழங்கப்படவில்லை. இதனால் பல முயற்சியாளர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள முடியாதநிலையில் இருக்கின்றனர். பாதிப்படைந்த முயற்சியாளர்களுக்கு இத்தகைய உதவிகள் கிடைக்காமையால் தங்கள் தொழிலை மீள ஆரம்பிக்க முடியாதநிலையில் இருக்கின்றனர்.

இதனைவிட வட-கிழக்கிற்கான புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளை மேற்கொள்ளவென அரசால் அமைக்கப்பட்ட சபையே




பனைவள ஆராய்ச்சி நிலையம்

வடக்கு மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை ஆகும். ஆயினும், புனரமைப்புத் தொடர்பில் இதனது செயற்பாடுகள் திருப்தி தருவதாக இல்லை என மக்களாலும் மற்றும் பல தரப்பாலும் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டன. ஆயினும், இன்று இந்த புனரமைப்பு புனர்வாழ்வுப் சபையானது கைவிடப்படுகின்ற நிலையை அடைந்துள்ளது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடாத்தப்பட்ட குடாநாட்டு மீள்குடியமர்வு, புனர்வாழ்வுத்திட்ட ஆய்வரங்கில் கலந்துகொண்ட குடாநாட்டு கல்விமான்கள தெரிவித்த சில கருத்துக்களையும் "யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டம் - 2002" என்ற பெயரில் 2002 டிசம்பர் 16, 17, 18 ஆம் திகதிகளில் யாழ். செயலகக் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கு தொடர்பாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் சாராம்சத்தினையும் இங்கு தருதல் அரசினதும் அரச அதிகாரிகளினதும் அக்கறையின்மையையும், செயற்திறன் இன்மையையும் எடுத்துக்காட்ட சிறந்த உதாரணமாக அமையும்.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடந்த ஆய்வரங்கில் "காலத்திற்கு ஏற்றவகையில் செயற்திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அத்திட்டங்களில் வெற்றி பெறமுடியும். நாம் திட்டம் போடுவதற்கிடையில் நிலைமைகள் மாறிவிடும் காலத்தில் வாழ்கின்றோம். பழைய திட்டங்களை விட்டு, புதிய புதிய திட்டங்களை வகுத்தால் தான் நாம் போடுகின்ற திட்டங்களால் பயன் பெறமுடியும். தகவற்தொழில்நுட்பம், கல்வித் துறைகளில் அதிகளவு முதலீடுகளைச் செய்ய முன் வரவேண்டும்" என்ற கருத்தும் "காங்கேசன்துறை சீமெந்து ஆலை, பரந்தன் இரசாயன ஆலை, ஆனையிறவு உப்பளம் போன்ற பல தொழிற்சாலைகள் பாதுகாப்புப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால் (இன்று காங்கேசன்துறை சீமெந்து ஆலை மட்டும் பாதுகாப்புப் பிரதேசம் என கூறப்படும் இடத்தில் அமைந்துள்ளது) எமது பொருளாதாரம் பெரும் பாதிப்பை அடைந்துள்ளது. பலர் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். இடப்பெயர்வின் பின்னர் சுய சேமிப்பு இன்மையால் உரிமையாளர்கள் முதலீடு செய்ய முடியாதுள்ளனர். கடன்பட்டு உற்பத்தி செய்தாலும் பெருட்களை சந்தைப்படுத்த முடியாதநிலை இங்கு இருக்கின்றது. உற்பத்தியாளர்களுக்கு எவ்வித ஊக்குவிப்புக்களும் இங்கு வழங்கப்படாது இருப்பது பெரும் குறைபாடாகும். புதிய தொழிலைச் செய்ய பணத்தினைப் பெறுவதற்கான வாய்ப்பு இங்கு இல்லை" என்ற கருத்தும் இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமுடையதாக காணப்படுகின்றது.

"யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டம் -2002" தொடர்பில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில், முன்னைய காலங்களில் இத்தகைய கருத்தரங்குகளிலும் திட்ட நடைமுறைப்படுத்தல்களிலும் தாம் புறக்கணிக்கப்படுபவராகவும், இக்கருத்தரங்குக்கும் தாம் கடைசி நேரத்திலேயே அழைக்கப்பட்டதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 1998 ஆம் ஆண்டு வடக்குப் புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபையால் (RRAN) தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திட்டத்தை மீளமைப்பதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை இன்றை காலகட்டத்தில் பொருத்தமற்றது என அரசசார்பற்ற இணையப் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்ததாக மேலும் உள்ளது. அடுத்து இங்கு மேலிருந்து கீழான அணுகுமுறை, கீழிருந்து மேலான அணுகுமுறை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலிருந்து கீழான என்பது - அதிகாரிகளால் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தலாகும். இங்கு மக்களின் பங்களிப்புக்கோ, கருத்துரைக்கோ இடமளிக்கமாட்டாது. மாறாக, கீழிருந்து மேலான அணுகுமுறை என்பது புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்கள் மக்கள் மத்தியில் இருந்து மக்களால் மக்களின் பங்களிப்புக்களுடன் தயாரிக்கப்பட்டு அவை அரச அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தல் ஆகும். யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அறிக்கையில் - புனர்வாழ்வு அமைச்சு மேலிருந்து கீழாக அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பாதிப்புற்ற ஐந்தரை லட்சம் மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி தீர்மானம் எடுக்கும் உரிமை மக்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் - அமைபுக்கள் பங்குபற்றாத ஒரு கூட்டத்துக்கு உண்டா என்று இணையம் கேள்வியும் எழுப்புகின்றது.

இங்கு போரினால் ஏற்பட்ட அழிவுகள் ரூபா 4 லட்சம் பில்லியனுக்கும் மேலாகும் என ஆரம்ப மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஆகவே - மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டுமானால், குறைநதது ஒரு லட்சம் மில்லியன் ஆரம்ப வேலைகளுக்குச் செலவு செய்யப்பட வேண்டும். ஆனால், அமைச்சு இதனை 28 ஆயிரம் மில்லியனுக்குள் மட்டுப்படுத்த முனைவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 83 ஆயிரம் பேர் வேலையில்லாமலும், ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் கீழ் உழைப்பாளர்களாகவும் உள்ளனர். வகுக்கப்படும் திட்டங்கள் இப்பிரச்சினைக்குத் தீவுகாணத் தவறின், மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாமை மட்டுமன்றி அர்த்தமற்றதாகியும் விடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இறுதியாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள், திட்டங்கள் மக்கள் மத்தியில் ஆலோசிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட வேண்டும். கொழும்பில் இருந்து வித்துவத் திட்டமாகத் தயாரித்து, அடிமட்டத்தில் திணிப்பது இலக்கை அடைய மாட்டாது. அத்தோடு மக்கள் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்த மாட்டாது. கடந்த காலங்களில் செலவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் ரூ. 5 ஆயிரத்து 500 மில்லியனுக்கும் நேர்ந்த கதி இதுவே எனவும் சுட்டிக்காட்டி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இயேசுநாயகம் ஜெயசுதன்**

### பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

யாழ்ப்பாணக் கைத்தொழில்கள் நல்ல நிலையை அடைய வேண்டுமாயின் மேற்குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியது மிக முக்கியமாகும். எனவே, கைத்தொழில் உற்பத்திக்குத் தேவையான உள்ளூர், வெளியூர் மூலப்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க வழிசெய்தல் வேண்டும். இதன்மூலம் வெளியிட மூலப் பொருட்களில் தங்கியிருக்கும் கைத்தொழில்களை மீளத் தொடக்க வழிபிறக்கும்.

போக்குவரத்தினைப் பொறுத்தவரையில் போக்குவரத்தில் காணப்படும் தடைகள் முற்றாக நீக்கப்படுதல் வேண்டும். அதாவது, போக்குவரத்து எந்நேரமும் சீராக இடம்பெற வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் வெளியிடங்களிலிருந்து மூலப் பொருட்கள், இயந்திர சாதனங்களை ஒழுங்காகவும் உரிய காலத்திலும் பெற்றுக் கொள்ள வழிபிறக்கும். மேலும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உரிய வேளையில் வெளியிடச் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாயைப் பெற முடியும். போக்குவரத்துச் செலவைக் குறைப்பதன் மூலம் உற்பத்திச்செலவைக் குறைத்துப் பொருட்களை குறைந்த விலையில் விற்க வழியேற்படும். *(தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*துளி இன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்*
*அளி இன்மை வாழும் உயிர்க்கு.*
*- திருக்குறள்.*

## நமது நோக்கு

# பரீட்சை ஆரம்பம்!

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி, அவர்களுக்குச் சுமுகமான வாழ்வைக் கொடுக்குமுகமாக - சிறான் செயலகத்தின் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

தாய்லாந்துப் பேச்சுக்களில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின்படி - மீளக்குடியமரும் பணிகளை முன்வைப்பதற்கான தனது தரப்புப் பணிகளை சிறான் குறிக்கப்பட்ட கால அளவிலேயே ஆரம்பித்துவிட்டது.

நேற்றுமுன்தினமும் நேற்றுமாக - யாழ்.அரச செயலகத்தில் இதற்கான திட்டங்களை வகுப்பதற்கும் தேவைகளை இனங்காண்பதற்குமாக, 21 பேர் கொண்ட குழுவானது, அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் யு.என்.எச்.சி.ஆர் ஆகிய முத்தரப்புக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் - ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை கையாள்வதற்காக தலா மூன்று பேர் கொண்ட ஏழு குழுக்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - சிறானின் யாழ்.மாவட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அதன் இணைப்பு அலுவலகம் ஒன்றும் அரச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில் - உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயான பகுதிகளில், அவற்றிலிருந்து இடம்பெயர்ந்தோரை மீண்டும் குடியமர்த்துவதற்கான ஒரு தரப்புப் பணிகள் வேகங்கொண்டுள்ள அதேவேளையில் -

மறுபுறத்தில் - இராணுவம் உறுதியளித்தபடி ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாகக் காத்திருக்கின்றன.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக, இராணுவத்தினர் தம்வசமுள்ள - பொதுமக்களின் சொத்துக்கள் மற்றும் உடைமைகளை மீண்டும் கையளிப்பது தொடர்பான திட்டத்தைத் தயாரித்தாக வேண்டும்.

இந்தக் காலவரையறைகளானது - முழுமையாகப் பூர்த்திசெய்யப்படும் பட்சத்திலேயே, மீள்குடியமர்வுக்கான இறுதியான நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்படவுள்ளது.

இதன்பேரிலான மீள்குடியமர்வுக்கான செயற்பாடுகளே - இனிவரும் பேச்சுக்களை - சுமுகமாகவும், உறுதியானதாகவும், முன்னேற்றகரமானதாகவும் கொண்டுசெல்வதற்கான பரீட்சைக்களமாகவும் அமையவிருக்கிறது.

ஏனெனில் - உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயான மீள்குடியமர்வு பூரணமாக்கப்படுமிடத்தே, இதைவிடச் சிக்கல் நிறைந்த அடுத்த கட்டம் ஆரம்பமாகவுள்ளது.

அரசாங்கம் இந்த முதற்கட்டத்தில் - தான் உறுதி கூறியபடி, அமைதிக்கான நம்பிக்கையையும், அர்ப்பணிப்பையும் கட்டியெழுப்புமானால் மட்டுமே - அடுத்த கட்டப் பிரச்சினைகளை அதனால் எதிர்நோக்க முடியும்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள்ளான மீள்குடியேற்றம் பற்றி ஜனாதிபதி இறுதியாகத் தெரிவித்த கருத்துக்கள் - அரசாங்கம் உறுதியாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் அவசியத்தை இன்னமும் அதிகமாக வலியுறுத்துவதாக அமைகின்றன.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மாற்றங்களைச் செய்வதாயின் யாழ்.பிராந்திய இராணுவத் தளபதியின் ஆலோசனைகள் அவசியம் கருத்திலெடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மீண்டும் வலியுறுத்திக் கூறியிருப்பது கவனத்திற்குரியதாகிறது.

அதேவேளை - உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை கேட்ட - இந்திய உயர் படையதிகாரி லெப்ரினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள், வெளியே கசிந்த வகையிலும் - பாதுகாப்பு வலயத்தைத் தற்போதுள்ளதுபோல் பேணுவதையே சிபார்சு செய்வதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் - தோன்றியுள்ள அமைதியையும், சமாதானத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள்தான் - எதிர்காலத்திற்கும் அமைதிச் சூழல் உறுதியாவதற்கு அடிப்படையானதாகும்.

அது மட்டுமல்லாது - அமைதிப்பேச்சுக்களில் முக்கிய தடைக்கல்லாக மாறியிருக்கும் இந்த விவகாரத்தைத் தீர்ப்பதில் அரசாங்கம் காட்டக்கூடிய அக்கறையும் துணிச்சலுமே - இனி அடுத்துவரும் கட்டங்களுக்கும் வழிதரும், நம்பிக்கையூட்டும் என்பது திண்ணம்.

ஆகவே - அரசாங்கத்திற்கான பரீட்சை நேரம் ஆரம்பமாகிவிட்டது என்றே சொல்லலாம். தனியே பரீட்சை மட்டுமல்ல - மதிப்பிடுதலும் சம காலத்திலேயே நடைபெறுவதுதான் இன்னமும் முக்கியமாகின்றது.

# யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் வடமராட்சி கிழக்கிற்கு முன்னுரிமை

## அரசாங்க அதிபர் பத்மநாதன் உறுதி தெரிவிப்பு

(உடுத்துறை)

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கே நிவாரணப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. அதன்படி யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 30 மில்லியன் ரூபாவில் 10 மில்லியன் ரூபா மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

- இவ்வாறு கடந்த வாரம் மருதங்கேணி சமுர்த்தி வங்கித் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையின்போது, இப்பகுதியில் சமுர்த்தி வங்கி திறந்து வைக்கப்பட்டதன் ஊடாக நீண்டகாலமாக மருதங்கேணிப் பிரதேசம் பிற்போக்கான நிலையிலிருந்து மீள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது எனவும் ஒட்டுமொத்தமாக இந்த உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள அனைத்துப் புனர்நிர்மாணப் பணிகளையும் விரைவில் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார். (17,117)

## யுத்தத்தில் காணாமற்போன

# படையினரின் உறவினர் புலிகளுடன் சந்திப்பு!

காணாமற்போன இராணுவத்தினரின் பெற்றோர், உறவினர் சங்க அங்கத்தவர்கள் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் விமல்குமார என்ற சிப்பாயை விடுதலை செய்யுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# வட - கிழக்கு பிரச்சினை தீரும்போது மலையகத்திற்கும் தீர்வு வேண்டும்!

## அமைச்சர் சந்திரசேகரன் முயற்சி

ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் உள்ள சமஷ்டி ஆட்சிமுறையை பின்பற்றி இலங்கையின் வட-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அதேவேளையில், இந்திய வம்சாவளி மலையக மக்களினதும், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் எவ்வாறு உள்ளடக்கப்படவேண்டுமென்பதில் தாம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு சமஷ்டி முறை பற்றி ஆராயச் சென்ற குழுவினர் அங்குள்ள ஆட்சி முறை பற்றி திருப்தி கொண்டதாலேயே மலையக மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் பிரச்சினை பற்றி இப்போது வலியுறுத்துவதாக அவர் தெரிவித்தார். இத்தாலிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டபோதே, அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகளில் ஒழுக்கக் கல்வி; கல்வியமைச்சு புதிய நடவடிக்கை

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போது மோசமான நிலையில் காணப்படும் ஒழுக்கக் குறைபாடுகளைத் தவிர்த்து அதனை மேம்படுத்த விழிப்புணர்வுத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளதாகக் கல்வியமைச்சின் செயலாளர் எச்.எம்.சிறிசேன நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.

இத்திட்டங்கள் தொடர்பான சுற்றுநிருபங்கள் சகல அரச பாடசாலைகளுக்கும் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணும் விடயம் கடந்த சில வருடங்களாக மிகவும் கவலைதரும் அளவுக்கு மிகவும் மோசமாயிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

ஒழுக்கம் பேணும் விடயம், மக்களின் வாழ்வியலில் முக்கியமான ஒரு கடமை என்பதால், மிக விரைவில் மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள் ஊடாகத் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒழுக்கத்தினை, பாடசாலைகளில் பேணுவதற்குப் பல விழிப்புணர்வுத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளினதும் மாணவத் தலைவர்களையும், அவ்வப் பகுதிச் சமயப் பெரியார்களையும் பங்குபெறச்செய்து, பின்னர் அவர்கள் மூலம் அவ்வப் பாடசாலைகளில் இத்திட்டங்கள் முதலாம் தவணையிலிருந்து நடைமுறைப்படுத்துவது எனக் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

# பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் மரணதண்டனை அச்சுறுத்தல்

## சர்வதேச மனிதஉரிமை குழுவிடம் சரத் அமுனுகம முறைப்பாடு

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மனிதஉரிமை மீறல்களை அரசாங்கம் மேற்கொள்வதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச நாடுகளின் மனித உரிமைகளுக்கான குழுவிடம், தனது கட்சியைச் சேர்ந்த 26 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சி ஆதரவாளர்கள் 2,500 பேருக்கும் அரசாங்கம் மரணதண்டனை அச்சுறுத்தலை விடுத்துள்ளதாக சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார். (01)

# தராசிற்காக கூட்டுறவுச் சங்கத்தின் கிளையை நாடும் தபாலக ஊழியர்

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள சித்தன்கேணி உப தபால் நிலையத்தில் கடிதங்களையும், தபால்பொதிகளையும் நிறுப்பதற்கான தராசு, நீண்டகாலம் இல்லாமையால், தபாலக ஊழியர்களும், பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலைமை காரணமாக தபாலக ஊழியர் உட்பட பொதுமக்களும் கடிதங்களை நிறுத்து, மேலதிக முத்திரையை ஒட்டுவதற்கும் அத்துடன் தபால்பொதிகளை நிறுத்து, அதற்குரிய முத்திரையை ஒட்டுவதற்கும் பொதுமக்களும் தபால் ஊழியர்களும், உபதபால் நிலைய அதிபரும் கூட அருகிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடையை நாடிச்செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பகுதிப் பொதுமக்களுக்குச் சேவையாற்றிவரும் இந்த உபதபால் நிலையத்திற்குத் தராசு ஒன்றினை வழங்குமாறு பல தடவைகள் விண்ணப்பித்தும் இதுவரை அது கிடைக்கவில்லையெனக் காரணம் கூறப்படுகிறது. (100)

# அங்காடி வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடு முஸ்லிம் வியாபாரிகளுக்கு பாரபட்சம் இல்லை

## முறைகேடு நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை என்கிறார் மேயர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முனீஸ்வரர் கோவில் பகுதியில் வர்த்தகர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோது, முஸ்லிம் வர்த்தகர்களுக்கு பாரபட்சம் காட்டவில்லை. அவ்வாறான துரதிஷ்டமான சம்பவம் ஏதாவது நடைபெற்றால் அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்.

- இவ்வாறு யாழ்.மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

யாழ்.நகர்ப் பகுதியிலிருந்த மரக்கறிச் சந்தையில் இயங்கி வந்த அங்காடி வியாபார நிலயங்கள் யாழ்.முனீஸ்வரன் வீதிக்கு மாற்றப்பட்டன.

இதன்போது வர்த்தகர்களுக்கான நில ஒதுக்கீட்டில் முஸ்லிம் வர்த்தகர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது எனவும்,

இந்தப் பிரச்சினைக்குத் தீர் வுகாண்பதற்காகக் குடியேறிய முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் சங்கம் ஒன்று ஆரம்பமாக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சங்கத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாநகர முதல்வர் செல்லன் கந்தையனுடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நகரில் மரக்கறிச் சந்தையில் இயங்கிவந்த அங்காடி வியாபார நிலையங்களை முனீஸ்வரன் பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க மாநகர முதல்வர் என்ற வகையில் நான் அதிகாரிகளுக்குப் பணித்திருந்தேன். இதனடிப்படையில்தான் அதிகாரிகள் அதனை அகற்றுவதிலும் சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு முனீஸ்வரர் பகுதியில் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வதிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறு நிலம் ஒதுக்கீடு செய்வதில் மாநகரசபை அதிகாரிகள் முறைகேடாகவோ, பாரபட்சமாகவோ நிலம் வழங்கியிருக்கமாட்டார்கள். அவ்வாறு நிலம் வழங்கியிருந்தமைக்கான முறைப்பாடுகள் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை.

முஸ்லிம் வர்த்தகர்கள் தமக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில் முறைகேடுகள் எதுவும் நடைபெற்றிருந்தது உறுதிப்படுத்தப்பட்டால் அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார் மாநகர மேயர் செல்லன் கந்தையன. (ச,கி)

# வன்னியிலிருந்து எழுந்த குரல்கள் வானலைகளூடு தேடிய உதவி!

கனடா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் டிசெம்பர் 15 தொடங்கி ஜனவரி 15 நாள்வரையிலான ஒரு மாத காலத்தை துயர் துடைக்கும் வாரமாக அறிவித்து அவசர நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கே.பி.றெஜி வன்னியில் இருந்து அவசர நிதிகோரி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே கனடா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த துயர்துடைப்பு மாதத்தை அறிவித்துள்ளது. பல வழிகளில் இந்த நிதியைத் திரட்ட புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் முழுமூச்சாக இறங்கியுள்ளார்கள்.

கடந்த 11 ஆம் நாள் சனிக்கிழமை *தமிழ்ச் சோலை வானொலி, கனேடிய தமிழ் வானொலி, அனைத்துலக தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்* போன்ற வானொலிகள் மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்துள்ள அவசர நிதிக்கு ஆதரவு திரட்டப்பட்டது. இந்த நேரடி ஒலிபரப்பு மாலை 7 மணி தொடங்கி மாலை 11.06 மணிவரை நான்கு மணித்தியாலங்கள் நீடித்தது.

*இந்த நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சியில் இங்குள்ள கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கீதவாணி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "எங்கள் வானொலி உங்கள் வானொலி, மக்கள் வானொலி," என்று நாளும் பொழுதும் வான் அலைகளில் ஓயாது கூக்குரல் இடும் இந்த வானொலிகள், வன்னியில் அல்லல்படும் நலிந்த குழந்தைகளின் கண்ணீர் துடைக்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்தது வருந்தத்தக்கது.*

இந்த நேரடி ஒலிபரப்பின்போது ஒரு முனையில் வன்னியில் இருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் றெஜி, முன்னாள் வெரித்தாஸ் தமிழ் வானொலி ஒலிபரப்பாளர் அருட்திரு ஜெகத் கஸ்பர் அடிகள், அருட்திரு எஸ். ஜே. இமானுவல், கனடா புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் இரா.குணநாதன், தமிழர் புனர்வாழ்வுக் கழக துணைப் பொறுப்பாளர் இனியன் கலந்துகொண்டார்கள். அவர்களோடு காந்தீயம், குருகுலம் இல்லங்களைச் சேர்ந்த இளஞ்சிட்டுக்கள், மலரும் மொட்டுக்கள் மற்றும் வெண்புறா அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

மறுமுனையில் தமிழ்ச் சோலை அறிவிப்பாளர் சுரேஷ் (சுதர்மா), கனேடிய தமிழ் வானொலி ஒலிபரப்பாளர் கலாதரன், கனடா தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் சண் மாஸ்டர், சிவநாதன், ஜெயபாலன், பரஞ்சோதி ஆசிரியர் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய கே.பி.றெஜி- வன்னியில் போரினால் தாய் தந்தையர்களை இழந்து வாடும் பிள்ளைகள், கணவர்மாரை இழந்த விதவைகள், கண்ணொளி இழந்த குழந்தைகள், செவிப்புலன் இழந்த குழந்தைகள், அங்கவீனமான குழந்தைகள் இவர்களது சோகக் கதைகளை எடுத்துச் சொன்னார்.

*துப்பாக்கியின் சத்தங்கள் ஓய்ந்து ஒரு ஆண்டு கழிந்தாலும் போரினால் பாதிக்கப்பட்ட வன்னி வாழ் மக்களின் வாழ்க்கையில் இன்னும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை என்றார்.*

வெளிநாடுகள் நிதியுதவி செய்வதாகப் பல நாடுகள் வாக்களித்தாலும் இன்னும் அந்த நிதியில் ஒரு சதமேனும் வன்னி வந்து சேரவில்லை என்றும் சொன்னார்.

உடமையிழப்பு, இருப்பிட இழப்பு அத்துடன் குடும்ப, சமூக கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைந்த நிலையில் ஆயிரக்கணக்கான தமிழக் குடும்பங்கள் வன்னியில் அல்லல்படுவதாகவும் சொன்னார்.

- 30,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் குடும்பத் தலைவர்களை இழந்து வறுமையில் வாடுகின்றன.

- 226,000 குடும்பங்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்து ஏதிலி முகாம்களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகினறன. இக் குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்லும் நாளை எதிர்பார்த்திருக்கின்றன.

- சுமார் 20,000 பள்ளிச் சிறுவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நெருக்கடி நிலையில் இருக்கிறார்கள்.

- 5,000க்கும் மேற்பட்ட சிறார்கள் தமது பெற்றோர்களை இழந்து எதிர்காலத்திற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

- 2,000 பேர் வரையில் கண்ணிவெடி மற்றும் விமானத் தாக்குதல்களால் தமது உறுப்புக்களை இழந்து, செயற்கை உறுப்புப் பொருத்துவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள 1,000 இற்கும் அதிகமானவர்களது குடும்பங்கள் சொல்லொணா வறுமையில் வாடுகின்றன என்றார் அவர்.

அருட்திரு கஸ்பர் அவர்கள் பேசும்போது - குருகுலம், காந்தியம் இல்லங்களில் வாழும் பிள்ளைகள் இறைவனின் தோட்டத்தில் பூத்த மலர்கள் என்று வர்ணித்தார். வறுமையில் வாழ்ந்தாலும் அந்தக் குழந்தைகள் தங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்வதாகக் கூறினார்.

இரா.குணநாதன் பேசும்போது- தான் எதிர்பார்த்ததைவிட பல மடங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வன்னிப் பெருநிலப்பரப்பில் நலிந்த மக்களுக்கு தொண்டாற்றுவதாகக் கூறினார். 'நாங்கள் இந்த மக்களுக்குப் பெரிதாக ஏதோ செய்கிறோம் என்று நினைத்த எனக்கு இங்கு வந்து பார்த்த பின்னர்தான் நாங்கள் செய்யும் உதவி, யானைப் பசிக்கு பொரியரிசி கொடுத்த கதைபோல் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது' என்று கூறினார்.

குருகுலம், காந்தீயம், வெண்புறா அமைப்புக்களைச் சேர்ந்த சிறு குழந்தைகள் வானொலியில் தாங்கள் எழுதிய கவிதையைப் பாடியும், முன்கூட்டி எந்த ஆயத்தமும் இன்றி இலக்கணச் சுத்தத்தோடு பேசியும் அனைவரையும் அசத்தினார்கள். ஒரு சட்டத்தரணிக்குரிய கம்பீரத்தோடு பேசிய குருகுலத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் சிவானந்தன் தான் சட்டம் படித்து சட்டத்தரணியாக வெளியேற விரும்புவதாகக் கூறினான்.

தாயக மண்ணில் கடந்த இருபது ஆண்டுகளாக நடந்த போரினால் ஏற்பட்ட அனர்த்தம், பொருளாதார சுமைகள், தொழில் வாய்ப்பின்மை, இடப்பெயர்வு, வறுமை, ஏழ்மை போன்றவற்றால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் நீடிக்கிறது.

எம் உடன்பிறப்புக்கள் உயிரிழப்பு, உடமையிழப்பு, இருப்பிட இழப்பு அத்துடன் குடும்ப, சமூக கட்டமைப்புகள் அனைத்தும் சிதைந்த நிலையில் அங்கு வாழ்கிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வு கழகம் மட்டுமே இவர்களைப் பலத்த இடர்ப்பாடுகள் நெருக்கடிகள் மத்தியில் பராமரித்து வருகின்றன.

காந்தீயம், குருகுலம், செஞ்சோலை, அறிவுச்சோலை போன்ற சிறுவர் இல்லங்களில் வாழும் குழந்தைகள் ஒவ்வொன்றும் தங்கள் எதிர்காலம் பற்றிய கனவுகளை நெஞ்சில் சுமந்து வாழ்கின்றனர்.

*'நாங்கள் நாளைய நாட்டின் சிகரச் செல்வங்கள்'* என நம்பிக்கையோடு முழங்குகிறார்கள்.

இந்தக் குழந்தைகள் கல்வி கற்க ஒழுங்கான பாடசாலைகள் இல்லை, ஆசிரியர்கள் இல்லை. பெரும்பாலான பாடசாலைகள் மரங்களின் கீழேயே நடக்கின்றன. இருக்கிற சில பாடசாலைகள் கூரையில்லாத பாடசாலைகளாகக் காட்சி அளிக்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பல குடிசைகள் நீரில் மூழ்கி அழிந்து போயின. தப்பின குடிசைகளின் கூரைகள் வழியாக மழைத் தண்ணீர் ஒழுகி தரை ஈரமாகியது.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் வன்னியில் வாழும் மக்களின் துயர் துடைப்பில் பெரும் பங்கு ஆற்றிவருகிறார்கள். கனேடிய தமிழர்கள் சுமார் ஆயிரம் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆனால் - கனடாவில் வாழும் மக்கள் தொகையை கணக்கில் எடுததுக் கொண்டால் எமது பங்களிப்பு போதுமானது என்று சொல்ல முடியாது.

எல்லா அறங்களிலும் சிறந்த அறம் மக்களின் பசிப்பிணியைப் போக்குவதாகும். *"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"* என மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் குரல் கொடுத்தார்.

*'அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலி னூங்கு இல்லை கேடு'* (குறள் 32)

தருமத்தின் மேற்பட்ட செல்வமுமில்லை. அத்தருமத்தை மறத்தலைப் பார்க்கிலும் கேடுமில்லை என்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு *"ஈதல்"*, *"அறம"* என்பதை தமிழில் உள்ள அற இலக்கியங்கள் யாவும் வற்புறுத்துகின்றன. இருந்தும் பலரது காதில் இந்த அறிவுரை விழமாட்டேன் என்கிறது.

கனடாவில் ஆண்டொன்றுக்கு குறைந்தது 500 திருமணங்கள் நடை பெறுகின்றன. ஒவ்வொரு திருமணமும் பெருந்தொகைப் பணச் செலவில் நடைபெறுகிறது. அதன் போது. மணவீட்டார் தலைக்கு 500 டொலர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு அன்பளிப்புச் செய்தால் ஒரு ஆண்டில் இரண்டரை லட்சம் டொலர்கள் சேர்ந்துவிடும். அவ்வாறே பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போதும், பூப்புநீராட்டு விழாவின்போதும், 31 ஆம் நினைவு நாள் சடங்கின் போதும் ஒரு சிறு தொகையை சம்பந்தப்பட்டோர் அன்பளிப்புச் செய்தால் பெருந்தொகை சேர்ந்துவிடும்.

லண்டன் மாநகரில் இருக்கும் ஸ்ரீ கனகா துர்க்கை அம்மன் கோயல் அறங்காவல் சபை ஆண்டுதோறும் இரண்டு லட்சம் டொலர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குக் கொடுதது உதவுகிறது. இங்குள்ள திருக்கோயில்கள் லண்டன் ஸ்ரீ கனகா துர்க்கை அம்மன் கோயில் அறங்காவல் அவையின் முன்மாதிரியைப் பின்பற்றி தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியினை வன்னியில் வாழும் மக்களின் துயர் துடைப்புக்கு ஆண்டுதோறும் கொடுத்து உதவ தாமாகவே முன்வர வேண்டும்.

சிறுதுளி பெருவெள்ளம் போல வீடுதோறும், அங்காடிகள் தோறும் உண்டியல் வைத்து அதில் அன்றாடம் கிடைக்கும் சில்லறைகளைப் போட்டு வந்தால் ஆண்டு முடிவில் அது பல லட்சம் ஆகிவிடும்.

பலர் படமாடக் கோயில் பகவற்குக் கொடுப்பதுதான் புண்ணியம் என நினைக்கிறார்கள். நடமாடக் கோயில் நம்பர்க்குக் கொடுப்பது புணணியம் அல்ல என்று நினைக்கிறார்கள். அந்த எண்ணம் தவறானது என்கிறார் மந்திரம் மூவாயிரம் தந்த திருமூலர்.

*படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈயில் நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில் படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே!* (திருமந்திரம்)

சித்திரம் போன்று அமைந்த மாடங்களையுடைய கோயிலுள்ளே இருக்கும் இறைவனுக்கு ஏதேனும் நைவேத்தியம் செய்தால், நடக்கின்ற மாடக் கோயிலாக விளங்குகின்ற மக்களுக்கு அதனால் பயன் இல்லை. ஆனால் நடமாடும் கோயிலாகவுள்ள மக்களுக்கு ஏதேனும் உண்ணக் கொடுத்தால் அது மாடக் கோயிலிலுள்ள இறைவனுக்குத் திருப்தி அளிப்பதாகும்.

எனவே ஆன்றோரும், சான்றோரும், திருவள்ளுவரும், திருமூலரும், அவ்வையும், பரணரும் அறிவுறுத்தியவாறு நலிவுற்று பட்டினியால் வாடும் தாயக மக்களது துயர் துடைக்க உங்களால் ஆன உதவியைச் செய்வதற்கு எல்லோரும் நான் முந்தி நீ முந்தி என்று முன்வர வேண்டும். அறம் செய்யுங்கள். அதனை இன்றே செய்யுங்கள். ○

**கனடாவிலிருந்து நக்கீரன்**

# இராணுவத்தின் மண் அணையால் ஒரு மைல் சுற்றும் மாணவர்கள்!

## மிதிவெடிகளால் கடந்து செல்லவும் அச்சம்

மந்திகை ஆஸ்பத்திரியடியிலிருந்து மக்கள் குடியிருப்புக்களால் கற்கோவளம் வரையில் படையினரால் காப்பு மண் அரண் 1997 இல் அமைக்கப்பட்டது. இதுவரைகாலமும் அகற்றப்படாமலே இருந்து வருகின்றது. இதனால் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு ஒரு மைல் சுற்றியே வர வேண்டியுள்ளது.

இப்பாடசாலைக்கு பல்லப்பை, பெரிய தேவனத்தாய், வல்லிபுரம் போன்ற கிராமங்களிலிருந்து வரும் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரு மைல் சுற்றிவர வேண்டியுள்ளது.

இந்த மண் அணையில் மிதிவெடிகள் புதைந்திருப்பதால் மக்கள் தங்கள் பிள்ளைகளைத் தனியே அனுப்புவதற்கு அஞ்சுகின்றனர்.

இந்த மண் அணையில் மிதிவெடிகளில் பல மாடுகள் காலை இழந்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இதுவரை 50 மிதிவெடிகள் வெடித்திருக்கின்றன. அண்மையில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்று காலை இழந்த சம்பவம் புலோலி தெற்கில் நடைபெற்றது.

இநத மண் அணையையும் மிதிவெடிகளையும் அகற்றுமாறு இவ்வூர் மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

### டெங்குக் காய்ச்சல் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள்

(நெல்லியடி)

டெங்குக் காய்ச்சல் விழிப்புணர்வு தொடர்பான துண்டுப் பிரசுரங்களை தமிழீழ சுகாதார சேவைகள் யாழ். நல்லூர்க் கோட்டத்தினர் வெளியிட்டுள்ளனர். இந்தத் துண்டுப் பிரசுரங்கள் யாழ். நகரின் பல பகுதிகளிலும் தற்பொழுது விநியோகிக்கப்படுகின்றது.

இதில் டெங்கு காய்ச்சல் உண்டாவதற்கான வழிகள், நோயரும்பு காலம், இதன் அறிகுறிகள், டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளது. (13)

### மாநகர சபை சிற்றூழியர் பதவியுயர்வு

யாழ்.மாநகர சபையில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் 17 பேருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றுமுன்தினம் மாநகர அலுவலகத்தில் வைத்து மாநகர முதல்வரால் வழங்கப்பட்டன.

# தேநீர் தயாரிக்கும்போது ஆடையில் தீப்பற்றியது!

## பருத்தித்துறையில் பெண் மரணம்

தேநீர் தயாரிக்கும்போது ஆடையில் தீப்பற்றி எரிந்து மரணமான சம்பவம் ஒன்று அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த அரசரட்ணம் புவனேஸ்வரி (வயது 41) என்பவரே இவ்வாறு மரணமானார்.

தேநீர் தயாரிக்கும்போது ஆடையில் தீப்பற்றி எரிந்து, எரிகாயங்களுடன் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 8 நாட்களின் பின் மரணமானார்.

இவரது மரணம் சம்பந்தமாக வடமராட்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியர் மரண விசாரணை நடத்தி - உடல் 70 எரிகாயங்களுக்கு இலக்காகி இரத்த சுற்றோட்டம் தடைப்பட்டதால் மரணமானார் எனத் தீர்ப்பளித்து, சடலத்தை மயானத்தில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை வைத்திய அதிகாரி கே.மயிலேறும் பெருமாள் பரிசோதனை நடத்தினார். பருத்தித்துறை பொலிஸைச் சேர்ந்த எல்.சி.பெரேரா சாட்சிகளை ஆஜர் செய்தார். (17)

# மரங்களை அழிக்காதீர்; வல்லையில் பதாதைகள்!

வல்லைவெளிப் பகுதியில் மரங்களை அழிப்பதை நிறுத்தவும், மர நடுகையை ஊக்குவிக்கவும் வேண்டி தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பதாதைகள் நாட்டப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் வல்லைவெளிப் பகுதியில் நடப்பட்ட சவுக்கு மரங்களும் மற்றும் பல காட்டு மரங்களும் விறகு வெட்டுவோரால் வெட்டப்பட்டதும் அதிகளவு கற்கள் இப்பகுதிகளில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டதும் அறிந்ததே.

# புலிகளுடன் இணையச் சென்ற சிறுவர்கள்

## மட்டக்களப்பில் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்வதற்காகச் சென்ற 18 வயதுக்குக் குறைந்த ஐந்து சிறுவர்களைப் புலிகள் மட்டக்களப்பில் பெற்றோரிடம் ஒப்படைத்துளளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இந்த ஒப்படைப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆண்டான்குளக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் தோத்திரன் இரு சிறுவர்களைப் பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்.

மாமாங்கம் அரசியற்துறை அலுவலகத்தில் மூன்று சிறுவர்களை, புலிகளின் மாமாங்கங் கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஜோதிபாலன் மற்றும் மட்டு. நகர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதி ஆகியோர் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். இந்த ஒப்படைப்பு நிகழ்வில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசிய மாமாங்கக் கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஜோதிபாலன்;, எக்காரணம் கொணடும் எமது இயக்கத்தில் 18 வயதுக்குக குறைந்தோரைச் சேர்ப்பதில்லை என்ற முடிவில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

எனினும் சிறுவர்களை நாம் படையில் சேர்ப்பதாகப் பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. நாம் பாடசாலைகளில் சிறுவர்களைக் கடத்துவதாகவும் வதந்திகள் பரப்பபப்படுகின்றன.


பெற்றோரீடம் கையளீக்கப்படும் சிறார்கள்

ஆனால், நாம் எதிர்காலத்திலும் கூட 18 வயதுக்குக் குறைந்தவர்களைப் படையில் சேர்க்கப் போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றோம். புலிகள் சர்வதேச சட்டங்களுக்கு உறுதியான மதிப்பளித்துச் செயற்படுகின்றனர் என்பதை இந்தக் கையளிப்பு நிகழ்வுகள் எடுத்துக் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரதேச செயலக நலன்புரிச் சங்க ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு, எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நலன் புரிச்சங்கத் தலைவர் மு.சிவராசா தலைமையில் நடைபெறும்.

தொடர்ந்து, பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ரா)

## 16 வயதுக்கு குறைந்தோரும் கடவுச்சீட்டு பெறவேண்டும்

### உள்துறை அமைச்சகம் கோருகின்றது

(கொழும்பு)

16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கும் இலங்கை அரசாங்கம் கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் கேட்டுள்ளது.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தனியான கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்கள ஆணையாளர் மேர்வின் விஜயசேகர தெரிவித்திருக்கிறார்.

பல வெளிநாடுகள் சிறுவர்களுக்கும் கடவுச்சீட்டு வழங்குமாறு கேட்கின்றன. 16 வயதுக்குக் குறைந்தோருக்கு, கடவுச்சீட்டு வழங்கும் நடைமுறையில்லாத போதும், வெளிநாடுகள் கோருவதால் இதனை பொதுவான நடைமுறையாக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வட பகுதி விவசாய உற்பத்திப் பொருட்களை ஏனைய பகுதிகளில் சந்தைப்படுத்த நடவடிக்கை

### வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

வட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை தென்பகுதியில் சந்தைப் படுத்துவது தொடர்பான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருவதாக வர்த்தக, நுகர்வோர் விவகார பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வட பகுதி உற்பத்திப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளில் சந்தைப்படுத்துவது தொடர்பாக, மூன்று கட்டத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஊடாக, வடபகுதி விவசாய உற்பத்திப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

வடபகுதிக்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்குச் சொந்தமான லொறிகள், கொழும்புக்குத் திரும்பும் போது வடபகுதி உற்பத்திப் பொருட்களை ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவசாய உற்பத்திப் பொருட்களை தம்புள்ள, கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள மரக்கறி விற்பனை நிலையங்களில் வைத்து விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விநியோகம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் படும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

### யாழ்.செயலக நலன்புரிச் சங்க ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக நலன் புரிக் கழகத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் மண்டபத்தில் தலைவர் மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அனைத்துப் பீட மாணவர்கள் அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீடமாணவர்களுக்குமான அவசர பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.இக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





அளவெட்டியில் வீழ்ந்து நொருங்கிய ஆளில்லா வேவு விமானத்தின பாகங்கள் சிதறிக் கிடப்பதையும் அப்பகுதியில் பாதுகாப்பை மேற்கொண்டு இருந்த படையினரையும் படங்களில் காணலாம்.

## எங்கே போகிறோம்...?

## சிறு பிள்ளைகள்... கல்லூரிகள்... கல்வி... எமது பிள்ளைகள்...

ஒரு நாட்டின் பாடசாலைகள் அந்த நாட்டின் உயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அடித்தளம் அமைக்கும் களங்கள். பாடசாலைகளின் கடமை ஒழுங்கு, பணிச்சிறப்பு, சீரான சேவை என்பன ஒரு சிறந்த சமுதாயத்துக்கான பிரஜைகளை உருவாக்கித் தருவதற்கான பண்புகள்.

பொது நிலையில் நோக்கும்போது நமது பாடசாலைகள், கல்லூரிகள் என்பவற்றுக்கிடையிலான தரம் வேறுபட்டுத் தெரிவது மிகத் தெளிவான விடயம். நிர்வாக ரீதியில் வகை பிரிக்கப்பட்டுள்ள வேறுபாட்டை இங்கு குறிப்பிடவில்லை. பாடசாலைகளின் வளம், கல்வித்தரம், உள்ளகநடைமுறைகள் மற்றும் அடைவுகள் என்பவற்றைப் பொறுத்த 'தர' வேறுபாட்டையே இங்கு குறிப்பிடுகிறேன்.

'எல்லோருக்கும் கல்வி' இன்று வலியுறுத்தப்பட்டு வருகிற ஒரு கோட்பாடு. கல்வி பிள்ளையின் கட்டாய தேவை. சகல பிள்ளைகளும் பெறுவதற்கு வாய்ப்பளிப்பதற்காகவே இலவசக் கல்வி எமது நாட்டில் நிலவுகிறது. பாட நூல் இலவசம், சீருடை இலவசம். இத்தகைய வசதியும் வாய்ப்பும் வழங்கப்பட்டும் கூட நமது பிள்ளைகளின் கல்வித்தரம் இன்னும் சீரான முறையில் உயராதிருப்பது ஏன்?

கல்வித்தரம் உயர்வதற்கு இவை ஒன்றும் போதாது என்பதா... அல்லது இந்த முன்னேற்றத்திற்கு வேறேதும் காரணிகள் தடையாக உள்ளனவா?

எமது கல்வித் துறையில் காணப்படுகிற குறைபாடுகள் என்று காலங்காலமாய் நாம் பல விஷயங்களை அறிந்து வந்திருக்கிறோம். அதிலும் தொடர்ச்சியான முன்னேற்றம் நோக்கிய நகர்வுக்குத் தடங்கலாக அடிக்கடி கல்வி முறையில் தோன்றும்-அறிமுகமாகும் புதிய நடைமுறைகள் அமைகின்றன.புதுமைகள் அறிமுகப்படுத்தப்படுவதும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதும் நன்மை தரும் நடவடிக்கைகள்தாம். ஆனால் அறிமுகமாகும் ஒரு புதிய அணுகுமுறை கைக்கொள்ளப்பட்டு அதன் பலன்கள் கைக்கு வருவதற்கு முன்னரே அது கைவிடப்பட்டு வேறொரு நடைமுறை அறிமுகமாவது ஒரு தடங்கல் அல்லவா....

நமது கல்வி முறையில் ஒரு காலத்தில் வெள்ளை அறிக்கை என்று ஒருவிஷயம் பேசப்பட்டது. அதை அடியொற்றிச் சில நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. சில காலத்துள் அரசாங்கம் மாறிய கையோடு அந்த விஷயம் கைவிடப்பட்டுவிட்டது- பின்பு கொத்தணிப் பாடசாலை முறை என ஒன்று அறிமுகமானது- அதன் பலன்களை முழுமையாகக் காணும் முன் அந்த நடைமுறையும் மாற்றப்பட்டது- இது போன்ற நிகழ்வுகள் வெகு சர்வசாதாரண விடயங்களாக அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களுக்கும் - உருவாக்குபவர்களுக்கும் தோற்றி இருக்கலாம். ஆனால் அவற்றின் திடீர்த் தாக்குதல்களுக்கு உள்ளாகும் பிள்ளைகளை யார் எண்ணிப் பார்க்கிறார்கள்?

அரசியல்வாதிகளின் பகடை ஆட்டத்தில் கல்வியும் ஒரு விடயமாய் ஆக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமல்லவா? இப்போது பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை அறிமுகமாகியுள்ளது. நோக்கத்தைப் பொறுத்தவரை மிகச் சிறந்த அணுகுமுறைகளையும் அடைவு இலக்குகளையும் கொண்டதாக இம் முறை இருக்கிறது.மாணவனின் தனியாள் ஆளுமை, திறன்விருத்தி, ஆழமான பாடப் புலமை, நுணுகிய அறிவு வளர்ச்சி என்பன இந்தக் கணிப்பீட்டு முறையின் அம்சங்களாக இருக்கின்றன- பாராட்டுவோம்.

நடைமுறைப்படுத்துதல் என்கின்ற கட்டத்திற்கு வரும்போதுதான் பிசகுகள் தோன்றுகின்றன. திட்டங்களை அமைப்பதில் இருக்கின்ற தெளிவு நடைமுறைப்படுத்தலில் இல்லாமல் போவது துக்கம் இல்லையா?

மேலிடத்தின் அழுத்தம் மட்டும் இந்த நடைமுறைகளைக் கொண்டு வரப்போதுமானதாக இருக்குமா - சம்பந்தப்பட்டவர்கள் - ஆசிரியர்கள்- அதிபர்கள் எவ்வளவு தூரம் இந்த நடைமுறையின் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்?

ஒவ்வொரு தரத்தினரும் தனக்கு அடுத்துள்ள தரத்தினருக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் எடுத்த நோக்கத்தை அடையலாம் எனக் கருதுகிறார்கள் போலும்!

அது பரவலான போலித்தனத்தைத்தான் கொண்டுவர முடியும் - பெயரளவிற்கு ஒரு காரியத்தை முடித்துவைக்க ஆசிரியர்களைத் தூண்டுவதாக அது அமைய முடியுமே தவிர, மாணவர்களின் நன்மை முன்னேற்றம் என்னும் இலக்குகளை அடைய அத்தகைய அழுத்தங்கள் உதவ முடியாது. (இங்கு பெரும்பாலான பாடசாலைகளில் இந்தக் கைங்கரியம்தான் பெருமளவில் நடைபெற்று வருகின்றன)

இந்தத்தரமான ஒவ்வொரு ஆசிரியரும் மனச்சாட்சியுள்ள - கடமையுணர்வுள்ள நல்ல பிரஜையாய் நடந்து கொள்ள வேண்டும் என உணர்ந்தாலன்றி வேறு வகையில் தீர்க்கப்படவும் முடியாது.

தனது சொந்தப் பிள்ளையின் கல்வி பற்றி இரவு பகலாகக் கனவு காணும் ஆசிரியர்கள் தனக்கு முன்னால் அமர்ந்திருக்கின்ற முப்பது, முப்பத்தைந்து குழந்தைகளை - பிள்ளைகளை வெறும் அ்.றிணைகளாகப் பார்க்கின்ற கொடுமை நமது நாட்டில் நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றது.

அநதக் குறைபாடு அப்படியென்றால் - அடுத்த குறைபாடு பாடசாலைகளில் நிலவும் 'போதாமை' மற்றும் 'இல்லாமை'க் குறைபாடுகள் பரவலாக கல்வி முன்னேற்றத்தைத் தடுத்து வருவதை அறியாதார் எவரும் இரார்.

ஓகோ என்று பெயரெடுத்த பாடசாலைகளும் அவற்றின் சாதனைகளும் ஒருபுறமிருக்கட்டும். ஏனைய பாடசாலைகள் - சிறிய பாடசாலைகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் அடிப்படை வசதிகள் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருப்பது எவருக்கும் தெரியாதா?

திணைக்களங்களும் அமைச்சர்களும் இது பற்றி ஏன் அலட்டிக் கொள்வதில்லை. மாணவனின் உளப்பண்பு - பாடசாலையின் அபிவிருத்தி பற்றி மாணவனுக்கு இருக்கும் அக்கறை என்பன பற்றியெல்லாம் கணிப்பிடுகின்றோம். புள்ளி குத்துகிறோம் - பாடசாலை பற்றித் திணைக்கள அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இருக்க வேண்டிய அக்கறை எந்த நிலையில் உள்ளது?

செல்வாக்கு, அறிமுகம் என்பதையெல்லாம் வைத்துக் கொண்டு வசதிக்கேற்ப பாடசாலைகளைப் போடுவித்துக் கொண்டு தங்கள் இராச்சியங்களை நடாத்தும் அதிபர்களும் ஆசிரியர்களும் கல்வி முன்னேற்றத்திற்கு எங்ஙனம் துணைபோக முடியும்? செல்வாக்குள்ள பாடசாலையில் தேவைக்கு அதிகமாக எப்படியோ ஆசிரியர்களை முடக்கி வைத்துக் கொண்டு சிறு பாடசாலைகளை அம்போ என விட்டுவிடும் நடைமுறை எப்படி முன்னேற்றத்திற்கு உதவ முடியும்.

மீண்டும் சந்திப்போம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்க வெளிநாட்டுத் தூதுவர்களின் சந்திப்பு!

## நோர்வே ஏற்பாட்டில் இன்று கொழும்பில் நடைபெறும்

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை இணைத்து, வடகிழக்குக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை ஒருமுகப்படுவத்துவதற்கான முக்கிய கூட்டமொன்றை நோர்வே ஒழுங்கு செய்துள்ளது.

இக் கூட்டத்தில் சிறான் பணிப்பாளர், அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இந்த முக்கிய சந்திப்பு, இன்று காலை கொழும்பில் நடைபெறுவதாக கிளிநொச்சி சிறான் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் நேற்று மாலை கொழும்பு பயணமானதாகவும் தெரியவருகின்றது.

இக் கூட்டத்தின் மூலம் வெளிநாட்டுத் தூதுவர்களிடையே சிறான் மேற்கொள்ளவுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து பூரண விளக்கமளிக்கப்படும் எனவும்,

வடகிழக்கு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கான உதவிகளை இணைந்து ஒரு சீராகப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



உடதலவின்ன படுகொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஜெனரல் ரத்வத்த நீதிமன்றத்திலிருந்து நேற்று சிறைச்சாலை வாகனத்தில் கூட்டிசெல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

### சதீஸ் நம்பியார் கொழும்பு வந்து சேர்ந்தார்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு குறித்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் இலங்கைக்கு வந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

## பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக இன்று முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் விரிவுரைக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த 16 ஆம் திகதி உள்ளூர்ப்பததிரிகை ஒன்றில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டது தொடர்பாக வெளியான செய்தியின் உண்மை நிலையை வெளிப்படுத்தப் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி, கடந்த செவ்வாய் முதல் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து விரிவுரைகளை பகிஷ்கரிக்க ஆரம்பித்தனர்.

மூன்றாவது நாளாக மாணவர்கள நேற்றும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்க்லைக்கழக மாணவர்கள் மேறகொண்டு வரும் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பாக இன்று அனைத்துப் பீட மாணவர்களும் கூடி ஆராயவுள்ளதாகவும் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்யவிருப்பதாகவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

### யாழ்.செயலகத்தில் திறைசேரி அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

திறைசேரி அதிகாரிகளுக்கும் யாழ். அரச செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் ஒன்று நேற்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திறைசேரி உயர் அதிகாரிகள் 5 பேர் கலந்து கொண்டு அரச நிதிப்பிரமாணங்கள் குறித்து கருத்துரைகளை நிகழ்த்தினர்.

# துரித மீள்குடியமர்வுக்கு உதவுமாறு பிரதேச செயலர்களுக்கு அழைப்பு

## செயலக மாநாட்டில் அரச அதிபர் விடுத்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் துரிதமாக மீள்குடியமர்வை மேற்கொள்வது தொடர்பாக, சிறான் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்குமான கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ். அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற, யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான இக் கூட்டத்தில், மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களும், யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் பிரதேச செயலாளர்களும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் இளம்பரிதி மற்றும் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் .

இக் கூட்டத்தில் மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்கு அமைக்கப்பட்ட குழுவினர் தமது செயற்பாடுகளை அந்தந்த பிரதேச செயலாளர்களுடன் இணைந்து இன்று முதல் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்செயற்திட்டங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதால், இவற்றை உடனடியாக மேற்கொள்ள சகல பிரதேச செயலாளர்களும் தம்மாலான அனைத்து ஒழுங்குகளையும், உதவிகளையும் துரிதமாகச் செய்யுமாறு யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

### ஆளில்லாத...

அத்துடன் அப்பகுதியில் திரண்டிருந்த ஏராளமான பொதுமக்களையும், படையினரும் பொலிசாரும் அவ்விடத்திலிருந்து அகற்றினர்.

இதையடுத்து அவ்விடத்தில் நண்பகல் 12.30 மணியளவில் தரையிறங்கிய 'பெல்' ரக உலங்கு வானூர்தியில் இரு விமானப்படை அதிகாரிகள் வந்து சேர்ந்தனர்.

இதையடுத்து, பலாலி விமானத் தளத்திலிருந்து வாகன அணியாக வந்த விமானப்படையினர், விமானத்தின் சிதைந்த பாகங்களை மீட்டுச் சென்றனர்.

இதேவேளை- விமானப்படைக்குச் சொந்தமான வேவு விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளானதாகவும், இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக விமானப்படை அதிகாரி கப்டன் கோலித குணதிலக தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவொன்று அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அஜித் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

### எம்.பிக்களின்...

தில் அமைச்சர் மகேஸ்வரன் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய நம்பியார் பொருத்தமற்றவர் என்றும் அவருக்கு இங்குள்ள நிலை தெரியாது என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் மகேஸ்வரன், இவரது யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

### இராணுவம்...

உறுப்பினர் குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இக்குழு விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் தான் தொடர்ந்து மூன்று சந்திப்புக்களை நடத்தப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# தேவைகளை இனங்காணும் குழு விசேட படிவங்களை விநியோகிக்கும்

## மீள் குடியமர்வுக்காக தரவுகளைத் திரட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் துரித மீள்குடியேற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட செயற்குழுவின் கூட்டம், இரண்டாவது நாளாக நேற்றும் யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது, மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணும் குழுவின் செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்கென விசேட படிவங்கள் அச்சிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

இவ்விசேட செயற்திட்டத்தின்படி, மக்கள் ஓர் பிரதேசத்தில் மீள்குடியமரும்போது, அந்தப் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் சுகாதார, போக்குவரத்து, குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகளும் அந்தப்பிரதேசத்திலுள்ள வீடுகளின் விபரங்களும், மற்றும் பல அடிப்படை வசதிகள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

இப்பணிகளை விரைவாகவும் துரிதமாகவும் மேற்கொண்டு இரண்டு வாரங்களில் பூர்த்தி செய்வதற்கும் நேற்றைய கூட்டத்தின்போது திட்டமிடப்பட்டது. (லி,ரா)

### சுவிற்சர்லாந்து...

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தழிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலணிப் பொறுப்பாளர் புலித்தேவனும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் பெர்னாவிகா தலைமையில் மனிதப் பாதுகாப்பு வள அமைச்சர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் அரசியற்துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

மக்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்தாது அடுத்த கட்ட அரசியல் பேச்சுக்குப் போவது மக்களை ஏமாற்றுவது போன்ற செயலாகும். ஒரு ஆண்டு காலமாகியும் மக்களின் இயல்பு நிலை வடக்கு-கிழக்கில் தோன்றவில்லை என்றும் குறிப்பிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளான- சிறான் அமைப்பு, விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் செயற்பாடுகள் ஆகியன பற்றியும், அதன் முன்னேற்றங்கள் பற்றியும் நேற்று கலந்துரையாடப்பட்டது.

### ராகிங்....

வேந்தர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக அனைத்துப்பீட பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், அனைத்துப்பீட மாணவர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்பின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று துணை வேந்தர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 16 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டதாக வெளியான செய்தியில் கூறப்பட்டிருந்தது போன்ற எந்தச் சம்பவமும் அந்தப் பகுதியில் நடைபெறவில்லை. இந்த செய்தி வெளியான பின் அந்த இடத்திற்கு சென்று நானும், பீடாதிபதிகளும், ஒழுக்காற்று உத்தியோகத்தர்களும் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் தகவல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டோம். எமக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றமை தொடர்பாக உறுதிப்படுத்தும் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என துணைவேந்தர் தெரிவித்தார்.

பத்திரிகைகள் எழுந்தமானமாக செய்திகளை பிரசுரிக்கலாம், அவற்றினை கருத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும்-

மாணவர்கள் மேற்கொண்டு விரிவுரைகளை பகிஷ்கரித்து வருவதால் அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ள பரீட்சையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் துணை வேந்தர் மேலும் தெரிவித்தார். (ச)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கந்தசாமி
### (கமிலஸ்)

*( ஓய்வு பெற்ற உப.அதிபர், யா/இமையாணன் அ.த.க.பாடசாலை)*

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி (கமிலஸ்) அவர்கள் நேற்று (22.01.2003) காலமாகிவிட்டார்.

அன்னார் லில்லிகிறேஸ் செல்வமணியின் அன்புக் கணவரும், செபநேசன் (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), செல்வரதி, ருகுணன் (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி யாண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மெற்றில்டா ஸ்ரெலாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.01.2003) பிற்பகல் 3.00 மணியளவில் கீரிப்பல்லி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**சீ.ஜேசுநாயகம்.**
(மைத்துனர்)

*பருத்தித்துறை வீதி,*
*நெல்லியடி.*

(சி/519)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.67 | 156.97 |
| 1 யூரோ | 103.20 | 104.36 |
| 1 சுவிஸ் பிராங் | 70.43 | 71.54 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.50 | 57.48 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.